குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] விபவ ஆண்டு ஐப்பசித்திங்கள் 10-11-88 [இதழ் 12

ஸ்ரீ காசியில் மூன்ருவது அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கம்
1988 டிசம்பர் 8, 9, 10 தேதிகளில் நிகழ இருப்பதை முன்னிட்டு



தருமை ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுன்னிலையில்
இந்தியப் பெருநாட்டின் முன்னுள் துணை ஜனதிபதி
மாண்புமிகு B. D. ஜாட்டி அவர்கள்
1984 மே 11, 12, 13 தேதிகளில் நிகழ்ந்த அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து உரையாற்றிய காட்சியை ஞானசம்பந்தம் நினைவு கூர்கிறது.

தருமையாதீனம் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர்

அருள்வாக்கு

ஆசகற்றி நின்னறிவி
லாநந்த மாஞ்சிவனைக்
கூசகற்றி யுன்றன்
குணமென்று—பேசியிடும்
பேயாவா திக்கேது
பேசிடில்நீ தானந்த
மாயாவா திக்கே மகன்.

— முத்திநிச்சயம் 14

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்
முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-11-88 | இதழ் 12

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஸ்ரீகாசியில் ஸ்ரீகுமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவு மூன்றுவது, அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம் ...	617
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	623
3	விஷ்ணு பக்தி ...	627
4	அபிராமி அந்தாதி ...	633
5	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	637
6	ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி கூறும் சம்பந்தர் பெருமைகள்	643
7	அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம் ...	645
8	போதமும் சித்தியும் ...	649
9	கழறிற்றறிவார் ...	653
10	செய்திகள் ...	657
11	எதிர்காலம் ...	661
12	கடிதம் ...	626
13	பார்வையாளர் குறிப்பு நகல் ...	648
14	மதிப்புரை ...	656
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-8. ...	665

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 12

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

விபவ ஐப்பசி 10—11—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஸ்ரீகாசியில் ஸ்ரீகுமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நினைவு

மூன்றாவது, அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கம்

(இரண்டாவது அறிக்கை)

இரண்டாவது அறிக்கை :

தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமை ஆதீனம் இருபத்தாறாவது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருளாசியோடு, தனது உலகளாவிய மூன்றாவது சைவசித்தாந்தக் கருத்தரங்கினை எதிர்வரும் 1988 டிசம்பர் 8, 9, 10 வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்றுநாள்களும் ஸ்ரீகாசிமாநகரத்தில் மிகச்சிறப்பாக நடத்தவுள்ளது, 10—9—1988 ஞானசம்பந்தம்

இதழ் தலையங்கத்தில் இக்கருத்தரங்குபற்றிய முதல் தகவல்கள் வெளியிடப் பெற்றன. அதிற் குறித்திருந்த 1988 டிசம்பர் 5, 6, 7 தேதிகள், நிர்வாக வசதிகளுக்காக மூன்றுநாள்கள் தள்ளி 8, 9, 10 தேதிகளாக மாற்றியமைக்கப்பெற்றுள்ளன. இவ்விரண்டாவது அறிக்கையில், இறுதிசெய்யப்பெற்ற கருத்தரங்க அமர்வுகள் மற்றும் நிகழ்முறைகளை ஞானசம்பந்தம் மகிழ்வுடன் நேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறது.

ஸ்ரீ குமரகுருபரர் நினைவஞ்சலி :

இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை இந்தியமாநிலங்கள் அல்லது வெளிநாடுகளில் ஏதேனும் ஓர் இடத்தில் உலகளாவிய கருத்தரங்கினை நடத்துவது என்று முதற்கருத்தரங்கின் நிறைவில் முடிபு காணப்பட்டது. முதற் கருத்தரங்கினைத் தருமை ஆதீனத்திலும், இரண்டாவது கருத்தரங்கினை மலேசியநாட்டுத் தலைநகர் கோலாலம்பூரிலும் மிகச்சிறப்பாக நடத்திய ஆராய்ச்சி நிறுவனம் மூன்றாவது கருத்தரங்கினை இதுபோது ஸ்ரீ காசியில் நடத்தத் தீர்மானித்தது. தருமையாதீனம் நாலாவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாசிலாமணி தேசிக மூர்த்திகளிடம் அருளுபதேசம் பெற்று, அவர் ஆணை ஏற்று, ஸ்ரீ காசிசென்று, அங்கே கங்கைக்கரையில், கேதாரகட்டத்தில், ஸ்ரீ குமாரசாமிமடம் கண்ட ஸ்ரீ ஆதி குமர குருபர சுவாமிகளின் 300 ஆண்டு நினைவைப் போற்றும் வகையில் இக்கருத்தரங்கினை ஸ்ரீ காசிமாநகரிலேயே கொண்டாடுவது பெரிதும் பொருத்தமாகும் என, தருமைக் குருமணி திருவுளம் பற்றினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் அதிபர் கயிலைமாமுனிவர் காசிவாசி ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் மூன்றாவது கருத்தரங்கினைக் காசியில் நடத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்துவருவதோடு, தாமே காசி போந்து கருத்தரங்க அமர்வுகளுக்கும் தலைமை ஏற்றுச் சிறப்பிக்க விருப்பது நேயர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

பங்கேற்கும் நிறுவனங்கள் :

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவு' மூன்றாவது அனைத்துலக சைவசித்தாந்தக் கருத்தரங்கினை, தருமை ஆதீனம் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்.

1. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம்.
2. திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகம்.
3. ஸ்ரீ காசி இந்துப் பல்கலைக் கழகம்.
4. ஸ்ரீ காசி சம்பூர்ணனந்தா சமஸ்கிருத பல்கலைக் கழகம்.
5. ஸ்ரீ காசி வித்தியாபீடம்.

ஆகிய சமய, மொழி, இலக்கிய நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மூன்று நாள் கருத்தரங்க அமர்வுகள் முற்குறித்த ஸ்ரீ காசி ஸ்ரீ குமாரசாமி மடத்திலும், காசியின் மூன்று பல்கலைக் கழகங்களிலும் நிகழ்த்தப் பெறவுள்ளன. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நினைவுச் சிறப்புக் கருத்தரங்கம், அவர் தம் நூல்களில் காணக் கிடக்கும் சைவசித்தாந்த நுட்பங்களை ஆராய்ந்துவெளிப்படுத்தும் நோக்கில் ஸ்ரீ காசி குமாரசாமி மடத்தில் மாலை அமர்வாக நிகழ்த்தப் பெறும்.

ஸ்ரீ குமரகுருபரர் நினைவுக் கருத்தரங்கம் :

கருத்தரங்கின் மூன்று நாள்களில் நடுநாயகமாக அமைந்த 9—12—1988 வெள்ளிக்கிழமை மாலை 7-00 மணிக்கு ஸ்ரீ காசி ஸ்ரீகுமாரசாமி மடத்தில் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகளின் 300 ஆவது ஆண்டு நினைவு விழாச் சிறப்புக் கருத்தரங்கம் நிகழவுள்ளது. "கயிலைமாமுனிவர்" காசிவாசி ஸ்ரீமத். முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமை ஏற்கிறார்கள். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. எஸ். முத்துக்குமரன் முன்னிலை வகிக்கிறார். ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, குமரகுருபரர் பிரபந்தத்தில் பதி என்ற தலைப்பிலும், தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி, தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, குமரகுருபரர் பிரபந்தத்தில் பசு என்ற தலைப்பிலும், தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், குமரகுருபரர் பிரபந்தத்தில் பாசம் என்ற தலைப்பிலும் ஆய்வுக் கட்டுரை வழங்கவுள்ளனர். மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகம் பேராசிரியர் டாக்டர். திரு. மா. இராமலிங்கம். சென்னைப் பல்கலைக் கழகம் தத்துவத்துறைப் பேராசிரியர் டாக்டர். திரு. வை. இரத்தினசபாபதி முதலியோரும் பங்கேற்கவுள்ளனர்.

தொடக்கவிழா முதல் அமர்வு :

மூன்றாவது சைவ சித்தாந்தக் கருத்தரங்கின் தொடக்க நிகழ்ச்சிகள் 8—12—88 வியாழக்கிழமை காலை 10-00 மணி அளவில் காசி சம்பூர்ணானந்த் சமஸ்கிருதப் பல்கலைக் கழக அரங்கில் தொடங்குகின்றன மேன்மைதங்கிய காசி மகாராஜா முன்னிலை வகிக்கிறார். சமஸ்கிருத மொழியிலான முதல் அமர்விற்கு காசி சமஸ்கிருதப் பல்கலைக் கழகத் துணைவேந்தர். பேராசியர், திரு. வி. வெங்கடாசலம் தலைமை ஏற்கிறார். வாரணசி. பேராசிரியர்,

திரு. பிரஜ்பல்லப துவிவேதி 'சைவசித்தாந்தம்' என்றதலைப்பிலும் ஜம்மு பேராசிரியர், திரு. பி. என். பண்டிட், காஷ்மீர் 'சைவம்' என்ற தலைப்பிலும், வாரணாசி டாக்டர் திரு. கே. டி. திரிபாதி, 'சைவ தர்சனங்கள்' என்ற தலைப்பிலும் சமஸ்கிருதத்தில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி, ஆய்வு செய்யவுள்ளனர்.

இரண்டாம் அமர்வு :

பிற்பகல் 2-30 மணி அளவில் தொடர்ந்து நிகழும் இரண்டாம் அமர்வில், பாண்டிச்சேரி டாக்டர் திரு. என். ஆர். பட், சைவ ஆகமங்கள் பற்றியும், லக்னோ டாக்டர்திரு. நவஜீவன் ரஸ்டோஜி, கிரமதத்துவம் பற்றியும், வாரணாசி டாக்டர்திரு. எஸ்.பி. வியாஸ், பல்வகைச் சமயம் - ஓர் ஒப்பீடு என்ற தலைப்பிலும், சாரநாத் பேராசிரியர், திரு. காமேஸ்வர்நாத் மிஸ்ரா, சைவத்தின் பல் வகைகள் - ஒப்பாய்வு என்ற தலைப்பிலும் சமஸ்கிருத மொழியில் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கி, ஆய்வு செய்யவுள்ளனர்.

மூன்றாம் அமர்வு :

இரண்டாம் நாள் 9—12—88 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி அளவில் மூன்றாவது அமர்வு காசிவித்யாபீடம் அரங்கில் இந்தி மொழியில் தொடங்கும். காசிவித்யாபீடம் துணைவேந்தர், பேராசிரியர், வித்யா நிவாஸ் மிஸ்ரா தலைமை ஏற்பார். திருவருட் பயன் என்ற தலைப்பில் வாரணாசி டாக்டர் திரு. ரமாகோஷ், சைவசமயம் என்றதலைப்பில் வாரணாசி டாக்டர் திரு. கைலாசபதி திரிபாதி, சைவ சாத்திரங்கள் என்ற தலைப்பில் வாரணாசி டாக்டர் திரு. ஆர். ஆர். பாண்டே, முதலியோர் இந்தி மொழியில் ஆய்வுக்கட்டுரைகள் வழங்கி, ஆய்வு செய்வர்.

நான்காம் அமர்வு :

பிற்பகல் 3-00 மணி அளவில், நான்காவது அமர்வு தமிழ் மொழியில் ஸ்ரீகாசி ஸ்ரீ குமாரசாமி மடத்தில் தொடங்குகின்றது. காசிவாசி ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் தலைமை ஏற்கிறார்கள். டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் என்ற தலைப்பிலும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், திருமுறைகளில் சைவசித்தாந்தம் என்ற தலைப்பிலும், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, சைவ சித்தாந்த வரலாறு என்ற தலைப்பிலும், பழநி டாக்டர் திரு. பி. ஆர். நரசிம்மன், சைவம் - வைணவம் - உறவு என்ற தலைப்பிலும்,

தஞ்சாவூர் டாக்டர் திரு. கோ. தெய்வநாயகம், திருக்கோயில் அமைப்பே சைவசித்தாந்தம் என்ற தலைப்பிலும் தமிழில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி, ஆய்வு செய்யவுள்ளனர்.

ஐந்தாம் அமர்வு :

ஐந்தாம் அமர்வு முற்குறித்தவாறு 9—12—88 வெள்ளிக் கிழமைமாலை 7-00மணி அளவில் ஸ்ரீகாசி கேதாரகட்டத்தில் உள்ள ஸ்ரீ குமாரசாமி மடத்தில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் 300 ஆவது ஆண்டு நினைவுச் சிறப்புக் கருத்தரங்கமாக நடைபெறும்

ஆருவது அமர்வு :

ஆருவது அமர்வு 10—12—88 சனிக்கிழமை காலை 10-00 மணி அளவில் பனாரஸ் இந்துப்பல்கலைக்கழக அரங்கில் ஆங்கில மொழியில் நடைபெறும் டாக்டர் திரு. எல். என். சர்மா தலைமை ஏற்கிருர். டாக்டர் ரமாகோஷ், உமாபதிசிவம் விரிக்கும் சைவம் என்ற தலைப்பிலும், டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா 'சிவப் பிரகாசம்' என்ற தலைப்பிலும், செல்வி பெட்டினு பாமர் காஷ்மீர சைவமும் சைவசித்தாந்தமும் என்ற தலைப்பிலும், இயக்குநர் திரு. தி. ந. இராமச்சந்திரன் ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும் என்ற தலைப்பிலும் ஆங்கில மொழியில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கி ஆய்வு நிகழ்த்துவர்.

ஏழாவது அமர்வு :

ஏழாவது அமர்வு பிற்பகல் 2·30 மணி அளவில் தொடங்கும். வாரணுசி இந்துப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. ஆர். பி. ரஸ்டோஜி தலைமை ஏற்பார். சென்னைப் பல்கலைக் கழகத் தத்துவத்துறைப் பேராசிரியர், டாக்டர். திரு. எஸ். பி. சபாரத்தினம் திருமூலர் அருளிய சைவசித்தாந்தம் என்ற தலைப்பிலும், டாக்டர் பி. எஸ். சோமசுந்தரம் திருஞானசம்பந்தர் திருப்பாடல்களில் சைவசித்தாந்தம் என்ற தலைப்பிலும், வாரணுசி திரு. ஹேமந்த்ரநாத்சக்ரவர்த்தி சைவ சித்தாந்தமும், காஷ்மீர் சைவமும் காட்டும் காலதத்துவம் - ஓர் ஒப்பாய்வு என்ற தலைப்பி லும் ஆங்கில மொழியில் கட்டுரைகள் வழங்கி ஆய்வுநிகழ்த்துவர். காசி பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், பேராசிரியர் திரு. ஆர். பி. ரஸ்டோஜி கருத்தரங்க நிறைவுப்பேருரை நிகழ்த்து கின்ருர்.

விழாமலர் :

கருத்தரங்கில், முதல் அறிக்கையில் குறித்த தமிழ், ஆங்கில நூல்கள் வெளியிடப்படுகின்றன. விழாமலர் ஒன்றும் அச்சிடப் பட்டு வருகிறது. இதில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வரலாறு சைவசித்தாந்தம், ஸ்ரீ குருஞானசம்பந்தரின் சிவபோகசாரம் முதலியன தமிழ், இந்தி, ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி எழுதிய 'திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்' என்ற தமிழ்க் கட்டுரையும், இக்கட்டுரையின் இந்தி மொழி பெயர்ப்பும் இடம் பெறுகின்றன. மற்றும் சைவ சமயம், சைவ சித்தாந்தம் தொடர்பான அறிஞர்களின் தமிழ், ஆங்கில ஆய்வுக் கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. விழாமலரை பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. ச. முத்துக்குமரன் வெளியிடுவார். சைவ ஆதீனத் தலைவர்கள் சிலரும், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் சிலரும் கருத்தரங்கில் பங்கேற்கக் கூடும்.

பேராளர்கள் :

தமிழ்நாட்டிலிருந்து கட்டுரையாளர்களும், பார்வையாளர் களுமாக முப்பத்தைந்து பேராளர்கள் பங்கேற்கிறார்கள். பேராளர் களுக்குத் தங்குமிடம், மற்றும் உணவு வசதிகளைத் திருப்பனந்தாள் காசி மடத்தின் அதிபர் கயிலைமாமுனிவர் காசிவாசி ஸ்ரீமத் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீகாசி கேதார கட்டத்தில் உள்ள ஸ்ரீ குமாரசுவாமித் திருமடத்தில் ஏற்பாடு செய்துள்ளார்கள். பேராளர்கள் அலகாபாத், சாரநாத் முதலிய இடங்களுக்குச் சென்று வருகின்றனர். பல நிறுவனங்கள் நினைவுப் பரிசுகள் வழங்குகின்றன. கருத்தரங்கம் குருவருளும், திருவருளும் துணைநிற்க மிகச் சிறப்பாக நிகழ்ந்தேற ஞானசம்பந்தம் பிரார்த்திக்கிறது.

வாழ்க உலகெலாம்!

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தீபாவளித் திருநாளில்

வழங்கியருளிய

ஆசியுரை*

தேசியத் திருநாள் :

இன்று தீபாவளித் திருநாள். கங்கா ஸ்நானம் ஆயிற்று என்று பெரியவர்கள் ஒருவரை ஒருவர் கேட்டு மகிழும் நேரம். இருள் நீங்கிக் கீழ்வானில் ஒளிக்கதிர்கள் கோலமிடும் புலர்காலை. உடலைப்பற்றி நின்ற அழுக்கு நீங்க எண்ணெய் தேய்த்து நீராடி, உலகைப்பற்றி நிற்கும் அழுக்காகிய இருள் நீங்க தீபங்களை நிரல்பட ஏற்றி, உள்ளத்தில் உள்ள அழுக்கு நீங்க இறைவன் திருவருளைச் சிந்தித்துப் புத்தாடை உடுத்து, இனிப்புக்கள் உண்டு மத்தாப்பு ஒளி சிதற வெடிகள் வெடித்து நாடே மகிழ்ந்திருக்கும் இந்திய தேசியத்திருநாள் தீபாவளி.

இந்தியா ஒரே நாடு; நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதற்குக் கட்டியம் கூறுவது போல் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இந்து சமயப் பெருமக்கள் மகிழ்வுடன் கொண்டாடும் உன்னதப் பெருநாள் இது.

தமிழகத்தில் தீபாவளி :

தீபாவளி தமிழ் மக்களாலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு வரும் கேளிக்கை நிறைந்த நன்னாள். தமிழர்கள் கொண்டாடும் பெருவிழாக்கள் பலவும் பௌர்ணமியை ஒட்டியே

---

* 8—11—88 தீபாவளித் திருநாளன்று, திருச்சிராப்பள்ளி அகிலஇந்திய வானொலிநிலையத்தார் ஒலிபரப்பிய ஆசியுரையைத் தழுவியது.

அமையும். தீபாவளி ஒன்று மட்டுமே 'அமாவாசையை' ஒட்டி வருகின்றது. எனவே, வடஇந்திய மாநில மக்களால் கொண்டாடப்பெற்றுவந்த தீபாவளிப்பண்டிகை,ஆங்கிலேயர் வருகையை ஒட்டி, இந்தியா ஒரேநாடாக உணரப் பெற்ற காலத்தில் தமிழ் மக்களாலும் சிறப்பாக ஏற்றுக் கொண்டாடப் பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது.

லக்ஷ்மி பூஜை :

தீபாவளிப் பண்டிகை பற்றிப் பழந்தமிழ் இலக்கியங்களிலோ, புராணங்களிலோ ஏதும் குறிப்புக்கள் இல்லை.

தீபாவளி என்ற சொல்லை தீப+ஆவளி என்று பிரித்து, தீப வரிசை எனப் பொருள் கூறுகின்றனர். தீபாவளி நாளில் விடியல் பொழுதில் வரிசைப்பட தீபங்களை ஏற்றிவைத்து விழா எடுப்பது வடமாநிலங்களில் இன்றும் வழக்கில் உள்ளது.

தீபாவளி நன்னாளினை வடஇந்திய மக்கள் லக்ஷ்மி பூஜையாகக் கொண்டாடுகின்றனர். தென்னாட்டினர் கேதார கௌரி நோன்பாகக் கொண்டாடுகின்றனர்.

புராண வரலாறு :

தீபாவளியைக் குறித்த வடமொழிப் புராண வரலாறு ஒன்று காணப்படுகிறது. பிரளய வெள்ளத்திலிருந்து பூமியைக் காப்பதற்காக வராக அவதாரம் எடுத்த திருமாலுக்கும், பூமாதேவிக்கும் பிறந்தவன் நரகாசுரன் என்பான். இவன் பிரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பெறற்கரிய வரங்களைப் பெற்றான். வரபலம் பெற்ற செருக்கால், இந்திரனை எதிர்த்துப் போராடி அவனது காதணி முதலியவற்றைக் கவர்ந்து கொண்டான். தன் குடிமக்களையே துன்புறுத்தி, அவர்கள் செய்யும் நன்மைகளையும் தடுக்கலானான். செய்வதறியாது திகைத்த தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டுஅரற்றினர். சிவபெருமான் திருமாலைஅழைத்து தண்டு, தனு, வாள், சங்கு, சக்கரம் ஆகிய பஞ்ச ஆயுதங்களையும் அவருக்கு வழங்கி, இவற்றின் துணையால் நரகாசுரனைக் கொல்லுமாறு பணித்தருளினார். தீமை புரிந்தொழுகும் நரகாசுரனைச் சினந்து கொன்றுவிட வேண்டாம் என பூமாதேவி திருமாலிடம் வேண்டியிருந்தாள். திருமாலும் நீயே அவனைக் கொல்லும்படி கூறினால் மட்டுமே கொல்வேன் என உறுதி அளித்தார். கிருஷ்ணவதாரத்தில் பூமாதேவி சத்தியபாமாவாகப் பிறந்திருந்தாள். முன்னைப் பிறப்பின் தொடர்ச்சி அறியாத சத்தியபாமா,

நரகாசுரனின் கொடுமை கண்டு, தன் மகன் என அறியாது அவனைக் கொல்லுமாறு வேண்டினாள்.

பூமிதேவி வேண்டுதல் :

திருமால் பேருருக்கொண்டுசென்று, தீமையேபுரிந்து வாழ்ந்த தன் மகனாகிய நரகாசுரனோடு போராடி இறுதியில் அவனை வீழ்த்தினார். இறக்கும் தருவாயில் நல்லறிவு வரப்பெற்ற நரகாசுரன், தான் செய்தனயாவும் குற்றமே என்பதை உணர்ந்து திருமாலிடம் மன்னிப்பு வேண்டினான். திருமாலும் மன்னித்து வேண்டிய வரம்கேள் என அருள்செய்தார். நரகாசுரன் "தான் உயிர்விடும் இந்நாளில், ஆசாரம் உள்ளவர்களாயும், ஒழுக்கம் உள்ளவர்களாயும், கொலை முதலிய பஞ்சமா பாதகங்களைத் தவிர்த்து எண்ணெய் முழுக்காடி, கோடி ஆடை உடுத்துக் கடவுளை வழிபடுவோர்க்கு எல்லா நலன்களும் அருளுக" என வேண்டி நின்றான். அவனை ஈன்ற பூமிதேவியும் தன்குமாரனின் பிழைபொறுக்க வேண்டினாள். திருமாலும் இவர் வேண்டுகோளையும் ஏற்று நரகாசுரனுக்கு அருள்பாலித்தார். இக்கதை பாகவதத்திலும் கூறப்பட்டுள்ளது.

நரகாசுரன் கொல்லப்பட்ட நாள் ஐப்பசித் திங்கள், தேய்பிறை, அமாவாசைக்கு முற்பட்ட சதுர்த்தசி விடியலாகும். அவன் வேண்டியவாறு மக்கள் ஆண்டுதோறும் தீமை அகன்ற மகிழ்ச்சி வெளிப்பாடாகத் தீபாவளித் திருநாளை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.

தீபாவளித் தத்துவம் :

மக்கள் உள்ளங்களில் தோன்றுகின்ற தீய குணங்களும் செயல்களுமே அவர்களுக்குப் பகையாய் அமைந்து துன்பங்களைத் தருகின்றன. அத்தீய குணங்கள் இறையருளால் அழிக்கப்படுகின்றன என்பதே நரகாசுரன் வரலாற்றின் தத்துவமாகும்.

பத்ம புராணத்தில் தீபாவளி நாளில் செய்யப்படும் பூஜை நரகத்தினின்றும் காத்தலால், இந்நாள் நரகசதுர்த்தி என வழங்கலாயிற்று என்று கூறப்பட்டுள்ளது.

ஐதிகங்கள் :

எண்ணெய் தேய்த்து முழுகுவது எல்லாநாளிலும் கூடாது. ஆனால், தீபாவளி அன்றுமட்டும் நாள், கிழமை பாராது, பொழுது விடியுமுன்னரே, இருள் கவிந்த நேரத்தில் எண்ணெய் முழுக்காடும்

வழக்கம் உள்ளது. அன்று மட்டும் வைகறைப் பொழுதில் எண்ணெயில் இலக்குமிதேவியும், தண்ணீரில் கங்கையும் கலந்து நின்று காப்பதாக ஐதீகம். இள வெந்நீரிலும் கங்கை உறைவதாக ஐதீகம். தீபாவளி காலைநீராட்டு கங்கைநீராட்டுக்கு இணையானது என்பர். இதனால் பலர் ஸ்ரீகாசி சென்று கங்கையிலேயே நீராடிக் கொண்டாடுகின்றனர்.

பாவம் தோற்று அறம் வென்ற திருநாள் !

தீமை அகன்று நன்மை மலர்ந்த திருநாள் !

இருள் அகன்று ஒளிபிறந்த திருநாள் !

இம்மங்கலத் திருநாளில் இந்திய மக்கள் தங்கள் சமயம், மொழி, இன பேதங்களை எல்லாம் மறந்து, திருவருளைச் சிந்தித்து தீமையினை நீக்கி நன்மை மலர்ந்து வாழ்வாங்கு வாழ்வார்களாக!

கடிதம்

தெ. முருகசாமி,
முதல்வர்,
இராமசாமி தமிழ்க் கல்லூரி,

காரைக்குடி,
9—11—88.

திருப்பெருந்திரு மகாசந்நிதானம் அவர்கள் திருவடிகட்குப் பணிவான வணக்கங்கள்.

8—11—88 தீபாவளிநாளன்று சுவாமிகள் திருச்சிவானொலியின் மூலமாக வழங்கியருளிய அருளுரை கேட்டு ஆசி பெற்றேன். நல்ல இனிய காலைப் பொழுதில் தீபாவளியின் வரலாறும், கொண்டாடும் நோக்கமும், அதில் தமிழர்களுக்கு உள்ள தொடர்பும் மொழிந்தருளிய பாங்கு உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. ஆங்கிலேயர் காலத்தில் பரந்துபட்ட இந்தியா ஒரு நாடாக ஆனபோதுதான் இந்நாகரிகக்கலப்பு வந்தது, பெரிதும்கொண்டாடப்பட்ட விழாவாக மலர்ந்தது என்ற பேருண்மையைக் கேட்டு மகிழ்ந்தேன். தமிழர்களின் விழாக்கள் நிறை நிலாவை ஒட்டியதாக அமையும், இந்தத் தீபாவளியை மட்டும்தான் அமாவாசையை ஒட்டி ஏற்றுக் கொண்டான் தமிழன் எனத் தமிழர்களின் பண்பாட்டோடு விளங்கியருளிய தீபாவளியின் நற்சிந்தனைகளைக் கேட்ட மகிழ்ச்சியைச் சுவாமிகளின் திருமுன் கூறி ஆசிபெற விழைந்தனன்.

விஷ்ணு பக்தி

திரு. ஆர். சுப்பிரமணியன்
பாண்டிச்சேரி

இன்றைய இந்து சமுதாயம் சைவம், வைணவம் என்று இரு பிரிவுகளாக உள்ளது. இங்கு கூறப்பெற்ற சைவம், வைணவம் என்னும் சொற்கள் வேதத்தில் கூறப்பெற்ற சொற்கள் அல்ல. ஆகமங்களிலும், புராணங்களிலும் வழங்கப்பெற்ற சொற்கள். ஆகமங்கள், புராணங்கள் எங்கும் பரவிய பிறகு ஆகமநெறியிற் சாராதவர்களும் ஆகம ஆசாரங்களைத் தங்கள் கோட்பாடுகளுக்கு மாறுபடாவண்ணம் ஏற்றுக்கொண்டனர். உதாரணம் சுமார்த்த பிராம்மணர்கள். இவர்கள் ஆகமநெறியில் நில்லாதவர் ஆயினும் சிலர் சைவ நெறியிலும், பலர் வைணவ ஆசாரத்துடனும் உள்ளனர்.

புராணங்களும் புராண காலத்தவைகளான பாஞ்சராத்ரம், வைகானஸம் ஆகிய நூல்களும் பல வேத மந்திரங்களை விஷ்ணு பரமாகப் பொருள் படுத்திக் கூறுவதாலும், பின்னல் வந்த இராமாநுஜர், மத்வர், நிம்பார்க்கர், வல்லபர் போன்றவர்களும் அவர்களின் வழியைப் பின்பற்றி நூல்கள் எழுதியவர்களும் நிறைய வேதமந்திரங்களை உவமையாக எடுத்துக்காட்டுவதாலும் பொருள் கூறுவதாலும் விஷ்ணுபக்தி வைதிகநெறி என்ற எண்ணம் நிலைபெற்றுள்ளது. இராமாயணம், பாரதம், பாகவதம் போன்ற இதிகாச புராணங்களை உபநியாசம் செய்வதாலும் பாமர மக்களிடையே விஷ்ணுபக்தி பரவியிருக்கிறது. மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. காபாலிக, காளாமுக, மாவிருத, நாதசம்பிரதாயத்தினர்களின் ஆசாரங்களில் உள்ள இடையூறுகளும் மக்களை விஷ்ணுபக்தியின்பால் செலுத்தின என்பதும் மிகையில்லை.

இந்தியாவில் தோன்றி - இன்றுள்ள தரிசனங்கள் எல்லாம் சிவபக்தி என்னும் அத்திவாரத்தின் மீது கட்டப்பெற்ற கட்டிடங்கள் தாம். இங்கு ஒருவருக்கு சமயானுபவம் ஏற்படுகிறது என்றால் சிவானுபம் ஏற்படுகிறது என்பது தான் பொருள். சிவபக்தி என்பது பெரியஅடிமரம். அதற்குப் பலகிளைகள் உண்டு. ஒவ்வொரு

கிளைகளிலிருந்தும் பிரிந்து செல்லும் பலகிளைகளும் உண்டு. எனவே இந்தியாவில் தோன்றிய எல்லா தரிசனங்களும் சிவபக்தியினின்றும் பிரிந்து சென்ற கிளைநெறிகளே தாம். இதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு பிரிந்து சென்ற ஒரு கிளையான விஷ்ணுபதி என்பதைச் சிறிது பார்ப்போம்.

வேதத்தின் ஆறு அங்கங்களுள் ஒன்று நிருக்தம். இது வைதிக சொற்களுக்குப்பொருள் விளக்கம் கூறும்நூல். இந்நூலுள் விஷ்ணு என்னும் சொல்லுக்குப் பொருள் கூறப்படுகிறது. இந்த நிருக்தத்தை இயற்றியவர் ''யாஸ்கர்'' என்பவர். இவரது காலம் 5 ஆம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

'' அதயத் விஷிதோ பவதி தத் விஷ்ணுர்பவதி।
விஷ்ணுர் விசதேர்வா வ்யச்னதேர் வா
தஸ்யை ஷா பவதி '' (நிருக்தம் 12-18)

விஷ்ணு என்றசொல்லுக்கு பரவுபவன், உள் சென்றுள்ளான், உலகை நன்றாக அடைந்துள்ளான் என்று பொருள். சூரியன் தன் ஒளியால் நன்றாகப் பரவி நிற்கும் பொழுது விஷ்ணுவாகிறான் என்பது பொருள். இதே கருத்தை 'ப்ருஹத்தேவதா'' என்ற நூலும் கூறுகிறது. இதன் ஆசிரியர் சௌனகர்.

'' விஷ்ணுதேர் விசதேர்வா ஸ்யாத்
வேவேஷ்டே வ்யாப்தி கர்மண :।
விஷ்ணுர் நிருச்யதே ஸூர்ய :
சர்வம் சர்வாந்தரச்சய :'' (ப்ருஹத்தேவதா 2-69)

பகவத்கீதையும் விஷ்ணுவை சூரியனாகத்தான் கூறுகிறது. ''ஆதித்யானாம் அஹம் விஷ்ணு'' (பகவத்கீதை 10) இவ்விதமே மகாபாரதம் மற்றும் புராணங்களும் கூறுகின்றன.

'' தாதா மித்ரார்யமா சக்ரோ வருண ஸ்த்வம்சஏவச।
பகோவிவஸ்வானு பூஷாச சவிதா தசமஸ்ததா॥
ஏகாதசஸ்ததா துவஷ்டா துவாதசோ விஷ்ணுருச்யதே॥''
(மகாபாரதம் அதி 66. 15-16)

இவ்விதமே விஷ்ணு புராணம் (1-15-132-133) மத்ஸ்ய புராணம் (6-3), வாயுபுராணம் (66-66-67), பிரமாண்ட புராணம் (II. 24. 33-34) ஆகியவைகளிலும் வருகிறது. விஷ்ணு என்னும் சொல் வேதத்துள் மூன்று பொருள்களில் வருகிறது. சூரியன் சோமலதை, யக்ஞம் என்பன.

"ஸய: ஸ விஷ்ணுர் யக்ஞ: ஸ:l ஸ ய: ஸ யக்ஞோsஸௌ ஸ ஆதித்ய: " (சதபதப்ராம்மணம் 14-1-1-6) என்றும், "யோ வை விஷ்ணு: ஸ ஸோம: " (சதபதி . . 3, 3 4-21), ' யக்ஞோவை விஷ்ணு:' ' (தைத்திரிய ப்ராம்மணம் 1-2-5-1) என்று சோமலதையாகவும். ஆதித்யனாகவும், யக்ஞமாகவும் வேதம் கூறுவதற்கு உதாரணங்கள்.

ருக்வேதத்தில் விஷ்ணுவுக்கு ஆறு சூக்தங்கள் உள்ளன, இந்த்ரா – விஷ்ணு சூக்தம் ஒன்று உள்ளது. மற்றும் விச்வேதேவ சூக்தங்களில் விஷ்ணுவைப் பற்றி வரும் பல ருக்குகள் உள்ளன. ருக்வேதத்தில் விஷ்ணு என்னும் சொல் நூறுமுறை வருகிறது. வேத சம்மிதைகளில் எங்கும் வாஸுதேவன் என்ற பெயர் வரவில்லை நாராயணன் என்னும்பெயர் மைத்ராயணீய சம்மிதை நீங்கலாக மற்ற எந்த சம்மிதைகளிலும் வரவில்லை. மைத்ராயணீய சம்மிதை, சதபத ப்ராம்மணம், கோபத ப்ராம்மாணம், தைத்ரீய ஆரண்யகம் ஆகியவைகளில் நாராயணன் என்னும் சொல் வருகிறது.

வேதத்துள் விஷ்ணுவைப் பற்றி வரும் கதைகள் வாமனக் கதையும், மூன்றடி வைத்த திரிவிக்ரமக் கதையும். இக்கதை திரும்பத்திரும்பக் கூறப்படுகிறது. ஆனல் புராணங்களை மனதில் வைத்துக்கொண்டு இக்கதைகளைப் பார்க்கக் கூடாது.

" இதம் விஷ்ணுர் விசக்ரமே த்ரேதா நிததேபதம்l
ஸமூளமஸ்ய பாம்ஸுரே l "

யதிதம் இஞ்ச தத்விசக்ர மதே விஷ்ணு:l த்ரிதா நிதத்தே பதம்l த்ரேதா பவாயl ப்ருதிவ்யா மந்தரிக்ஷே திவிதி சாகபூணி:l ஸமாரோஹணே விஷ்ணுபதே கயசிரஸி இத்யௌர்ணவாப:l ஸமூளமஸ்யபாம் ஸுரேப் யானே s ந்தரிக்ஷே பதம் ந த்ருச்யதேl அபிவோபமார்த்தே ஸ்யாத்l ஸமூல மஸ்ய பாம்ஸுல இவ த்ருச்யத இதிl பாம்ஸவ: பாதை: ஸூயதந் இதிவா (நிருக்தம் 12-19) என்பது நிருக்தம். "மூன்று வகையாக அடிவைத்துள்ளான். புழுதி நிறைந்த உலகில் அவனுடைய அடி மறைந்து விடுகிறது. இந்த எல்லாவற்றையும் விஷ்ணு ஆக்ரமித்துள்ளான். மூன்று விதமாக அடிவைத்துள்ளான். பூமி, அந்தரிக்ஷம், ஆகாயம் இவைகளில் மூன்று விதமாக அடிவைத்துள்ளான் என்று சாகபூணி கூறுகிறார். முற்பகலில் உதயகாலத்திலும், நடுப்பகலில் ஆகாயத்திலும், பிற்பகலில் வீட்டின் கூரையிலும் (கயசிரசி) அடிவைக்கிறான் என்று ஔர்ணவாபர் கூறுகிறார் என மூன்றடி வைத்த கதையை சூரியபரமாக உரை கூறுகிறது. நிருக்தம். இங்கு கூறப் பெற்ற "கய சிரஸி" என்னும் சொல்லே கயாமாகாத்மியம் தோன்றக் காரணமாயிற்று.

புராணங்களில் விஷ்ணு கருடவாகனமுடையவர் ஆனுல் வேதம் வேறு விதமாகக் கூறுகின்றது. சோமலதை சுவர்கத்தில் இருந்தது. காயத்ரீசந்தஸ் கருடனுகச் சென்று சோமலதையைக் கொண்டு வந்தது என்று யஜுர்வேதம் கூறுகிறது. (யஜுர்வேதம் தைத்ரீயசம்மிதை 3. 5. 7. 1 ; ப்ராம்மணம் 1. 1. 3 - 10) விஷ்ணுவின் ஆயுதம் சக்ரம். "சக்ரபாணயே ஸ்வாஹா " என்று ஷட்விம்சப்ராம்மணம் கூறுகிறது (5. 10) "வஜ்ரோவை சக்ரம்" என்று சக்ரத்தை வஜ்ரத்தின் மற்ருெரு உருவமாக வேதம் கூறுகிறது. இந்திரனுக்குப் பிறகு தோன்றியவர் விஷ்ணு.இதனுல் உபேந்திரன் என்பது விஷ்ணுவின் ஒரு பெயர். "விஷ்ணுர் வை தேவாநாம் த்வாரப: " என்று ஐதரேய ப்ராம்மணத்தில் (ஐ-ப்ராம் 1-30) விஷ்ணு தேவர்களின் வாயிற்காவலன் என்று வருகிறது. இதை பாகவத புராணம் மகாபலியின் வாயில் பக்திக்குக் கட்டுப்பட்டுக் காவல் புரிகிருர் என்று கூறுகிறது. விஷ்ணுக்குப் பிரம்மாவை மகனுக வேதம் வெளிப்படக் கூறவில்லை. ஆனுல் பிராஜபதியால் விஷ்ணு படைக்கப்பெற்றவர் என்று வேதம் கூறுகிறது (தைத் - ப்ராம் 2. 3 - 2. 4) இதேபோல மஹாலக்ஷ்மியை விஷ்ணுவின் சக்தியாக வேதம் கூறுவதாகத் தெரியவில்லை. ருக்வேதத்தின் கிலபாகமான ஸ்ரீசூக்தத்தில் அக்னியிடம்தான் செல்வம்வேண்டப் படுகிறதே தவிர அங்கு விஷ்ணுவின் பெயர் காணப்படவில்லை. யஜுர்வேதத்தில் இரண்டு இடங்களில் விஷ்ணு பத்தினி என்று வருகிறது.

" க்ருணுஹி1 க்ருதவதீஸதராதிபத்யை " என்று ஆரம்பித்து " த்ருவாம் திசாம் விஷ்ணு பத்நயகோராsஸ் யோசனு ஸஹஸா யா மனோதா " என்றும் (தை. ஸம். 4.4-12)

" மஹீம் தேவீம் விஷ்ணுபத்னீ மஜூர்யாம்" என்றும் (தை, ப்ராம் 3-1-5-6) வருகிறது. முதல் மந்திரத்திற்கு மேல் திக்கும். இரண்டாவது மந்திரத்திற்கு நிலமும் விஷ்ணுபத்னி அதாவது விஷ்ணுவாகிய ஆதித்யனுல் காக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

விஷ்ணுவின் ஸ்தானம் விஷ்ணுபதம். "வியத்விஷ்ணுபதம் வாது பும்ஸ்யாகாசவிஹாயஸி" வானம்தான் விஷ்ணுபதம். இச்சொல்லையே புராணங்கள் வேறுவிதமாகப் பயன் படுத்தின. பதம் என்பதற்குத் திருவடி என்று பொருள் செய்து விஷ்ணு பாதத்திலிருந்து கங்கை பிறந்தது என்று கதை கூறுகின்றன. வானத்திலிருந்து நீர் பெருகியது என்பது தான் இதற்குச்சரியான பொருள். வராஹாவதாரம் பிரஜாபதியினுடையது என்று தைத்திரீய ஸம்ஹிதை 7-ஆம் காண்டத்தில் வருகிறது. (7-1-5) இதேபோல மத்ஸ்யாவதாரமும்கூறுகிறது.புராணங்கள்இவைகளை

விஷ்ணுவினுடையவை என்று வர்ணிக்கின்றன. தேவர்களின் புகழ்களை அபகரித்த விஷ்ணுவின் தலை அறுந்த வரலாறு தைத்திரீ யாரண்யகம் 5 ஆம் பிரச்னத்தில் வருகிறது. இங்கு இக்கதை ப்ரவர்க்யம் என்னும் வேள்வியைச் செய்வதன் பயனைக் கூறுகிறது. விஷ்ணு யக்ஞமாதலின் யக்ஞத்தை முழுமையாகச் செய்ய வேண்டும் என்பதைக் கூற இக்கதை இங்கு கூறப்படுகிறது. இக் கதையே புராணங்களில் ஹயக்ரீவ அவதாரமாகக் கூறப்படுகிறது.

ஐதரேய ப்ராம்மணத்தில் "அக்னிர் வைதேவானுமவமோ விஷ்ணு: பரமஸ்ததத்தரேண ஸர்வா அன்யாதேவதா: (ஐ 1-1.) என்று வருகிறது. வேள்விகளில் ஓதப்பெறும் மந்திரங்கள் அக்னி முதலாக விஷ்ணு ஈறாக ஓதவேண்டும். இவைகளுக்கு நடுவில் இந்திரன் முதலான மற்ற தேவர்களுடைய மந்திரங்களை ஓத வேண்டும் என்பது வேதபாஷ்யம். ஆனால் மத்வர் அக்னி தாழ்ந்தவர் விஷ்ணு உயர்ந்தவர் என்று தேவதாபரமாகப் பொருள் கூறியிருக் கிறார். இது முன் பின் விசாரிக்காமல் கூறிய உரை. வேதத்துள் அங்கங்கே விஷ்ணுவின் குணநலன்கள் கூறப்படுகின்றன. இவை யெல்லாம் மொத்தமாகச் சூரியனையே சாரும்.

இதுவரை பொதுவாக வேதஸம்மிதைகளிலும், பிராம்மணங் களிலும் விஷ்ணுவைப்பற்றிக் கூறப்பெற்றவைகளைப் பார்த்தோம். அதாவது கதிரவனுடைய நிலைவேறுபாடுகளுள் ஒன்றுதான் விஷ்ணு என்பது வேதங்களின் திரண்ட கருத்து. இந்த சூரியன் சிவபெருமானுடைய சரீரம். எண்வகைத் திருமேனிகள் இறைவ னுக்கு உண்டு. நிலம், நீர், தீ, காற்று, வானம், சூரியன், சந்திரன், இயமானன் என்பவைகள் இறைவனின் எட்டுத் திருமேனிகள்.

" அஸௌ யஸ்தாம்ரோ அருண உத பப்ருஸ்ஸுமங் கல:l
யேசேமாம் ருத்ரா அபிதோ திக்ஷுச்ரிதா :
ஸஹஸ்ர சோவை ஷாம்ஹேட ஈமஹே "

அஸௌ யோs வஸர்பதி நீலக்ரீவோ விலோஹித:l உதைநம் கோபா அத்ருசன் அத்ருசன் உதஹார்ய:l உதைநம் விச்வா பூதானி ஸ த்ருஷ்டோம்ருடயாதி ந:ll" (தை. ஸம். 4-5-1)

எவர் நீலகண்டரோ அவரே சிவந்த வண்ணமுடையவராகிய இந்தசூரியனாக உதிக்கிறார். சூரியனாகிய இந்த ருத்ரனை ஆயர்களும், தண்ணீர் கொண்டுவரும் பெண்களும் பார்க்கிறார்கள். மற்றும் எல்லாப்பிராணிகளும் பார்க்கின்றன. இவ்வண்ணம் அனைவராலும் தரிசிக்கப்பெற்ற ஆதித்ய ரூபியாகிய ருத்ரன் நம்மை இன்புறச் செய்யட்டும் என்பது இதன் பொருள். நாம் காணும் ஆதித்யனைச் சரீரமாக உடையவர் சிவபெருமான்.

"மஹாதேவதேவ இதி யந்மஹாந்தேவ ஆதித்யஸ்தேந" (ஸாங்க்யாயன ப்ராம்மணம் 6 - 6) என்றும் "ஈசானுஸீதி ஆதித்யோவா ஈசான:" (சதபதப்ராம்மணம்) ஆதித்யனைச் சரீரமாக உடைய சிவபெருமானுக்கு மகாதேவன் என்பது பெயர் என அட்டமூர்த்திகளைப் பற்றிக் கூறும் இடத்தில் சாங்கியாயனப் பிராம்மணமும், கௌஷீதகி ப்ராம்மணமும் கூறுகின்றன. ஆதித்யனைச் சரீரமாகஉடைய சிவபெருமானுக்கு ஈசானன்என்பது பெயர் என்று சதபதப்ராம்மணம் கூறுகிறது. எனவே வேதப் பிரமாணத்தின்படி ஆதித்யன் இறைவனின்சரீரம். ஆதித்ய மண்டலத்தில் அந்தர்யாமி சிவபெருமான் தான்.

"ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே ஹிரண்யச்மச்ரு ஹிரண்ய: கேச ஆப்ரணகா: ஸர்வ ஏவ ஸுவர்ண:" இந்த சூரியமண்டலத்திற்குள் பொன்னார்மேனியனை ஒரு புருஷன் காணப்படுகிறார் என்பது மேற் கூறிய மந்திரத்தின் பொருள். இம்மந்திரத்தில் கூறப்பெற்ற ஹிரண்யமயமான புருஷனுக்கு என்ன பெயர்? வேதமே உரை கூறுகிறது.

"நமோ ஹிரண்ய பாஹவே ஹிரண்ய வர்ணாய ஹிரண்ய ரூபாய ஹிரண்யபதயே, அம்பிகாபதயே, உமாபதயே, பசுபதயே நமோநம:" (தை. ஆரண் - 10) அம்பிகாபதியும், உமாபதியும் ஆன பசுபதிதான் அந்தப் பொன்னார் திருமேனியன் என்பது மேற் கூறிய மந்திரத்தின் கருத்து. முன் மந்திரத்தில் புருஷன் என்று தானே கூறியிருக்கிறது புருஷன் என்பது யாருடைய பெயர்? வேதமே கூறுகிறது.

"புருஷோ வை ருத்ரஸ் ஸந்மஹோ நமோநம: (தை. ஆ - 10) புருஷன் என்ற பெயருடைய ருத்ரன்தான் உண்மைப் பொருள் அவனுக்கு வணக்கம் என்பது இதன் பொருள். வேதம் முழுவதும் புருஷன் என்ற சொல்லால் விஷ்ணு கூறப்படவில்லை.

விஷ்ணுவுக்கு உலக வழக்கில் புருஷன் என்ற பெயர் வழங்கு கிறது. இது எப்படி வந்தது என்று பார்ப்போம்.

புருஷோ ஹ வை நாராயணோகாமயத1 அதிதிஷ்டேயம் ஸர்வாணி பூ தான்யஹமேவேதம் ஸர்வம் ஸ்யாமிதி ஸ ஏதம் புருஷமேதம் பஞ்ச ராத்ர யக்ஞக்ரது மபச்யத்1 (சதபத 13.6.1.1)

புருஷனாகிய நாராயனன் தான் எல்லாமாக ஆகவேண்டும் என்று விரும்பினர். அதற்காக ஐந்து நாட்கள் செய்யும் புருஷ மேதம் என்னும் வேள்வியைக் கண்டார் என்று சதபதப் பிராம்மணம் புருஷன் என்னும் பெயருடன் நாராயணன் என்ற பெயரை இணைத்துக் கூறுகிறது. நாராயணன் என்பது விஷ்ணுவி னுடைய பெயர் என்ற வழக்கு ஏற்பட்ட பிறகு புருஷன் என்ற பெயரும் விஷ்ணுவுக்கு ஏற்பட்டது. (தொடரும்)

கட்டுரை எண். 101.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A.D., Lit., Ph.D., D. P. P. A., D. U. N., I, U
பருத்தியூர்.

நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளைப், புவியடங்கக்
காத்தாளை, அங்குசம், பாசம் குசுமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு
[தீங்கில்லையே!

அ. ஆத்தாள்.

(1) அம்பிகையைத் 'தாய்' என்ற பொருளில் ஆத்தாள் என்கிறார்.

(2) ஆத்தாள் என்பது கிராமியவழக்கு; பாமரர் அம்பிகையை அன்புடன் அழைக்கும் பெயர். காளியாத்தாள், மாரியாத்தாள் என்றெல்லாம் அவளை அழைப்பர்.

(3) அவள் கற்றோர், புலவர், மெய்யடியார் என்பவர்களுக்கு மட்டுமின்றி ஏழை எளியோருக்கும் தாயாவாள். அதனை உணர்த்த பாமரவழக்குச் சொல்லாகிய 'ஆத்தாள்' என்பதால் அழைத்தார். "அப்பன் இரந்துண்ணி, ஆத்தாள் மலைநீலி" என்ற பாடலில் கவிகாளமேகம் அதுபோன்ற சொற்களையே எடுத்தாளக் காண்கிறோம்.

ஆ. எங்கள் அபிராமவல்லி.

(1) எம்போன்றஅடியார் திருக்கடவூரின் கண் வழிபட அபிராம வல்லி எனத் திருநாமம் கொண்டு அமர்ந்தவளும் அவளே.

(2) அனைத்துலகங்களுக்கும் தாயாகி எங்கும் நிறைந்த 'ஆத்தாள்' ஆங்காங்கே அடியவர் உரிமையுடன் வழிபடத்தக்க வகையில் எழுந்தருளியிருக்கிருள். 'எங்கள் மீனாட்சி,' 'எங்கள் முத்துமாரி' என்பன போன்று தங்களுக்குப் பிரியமான தெய்வங்களைப் போற்றுவதும் அடியார் இயல்பு. "எங்கள் சங்கரனார்' என்ருர் முன்பு.

இ. அண்டமெல்லாம் பூத்தாள்.

(1) அண்டங்கள் அனைத்தையும் எவ்விதச் சிரமமும் இன்றி எளிதில் படைத்தவள்.

(2) மலர் மலர்வது போன்று எளிதில் தானே பலவாகவிரிந்து அண்டங்களாய் மலர்ந்தாள். ஆதலால் 'பூத்தாள்' என்ருர். "பூத்தவளே புவனம் பதிஞன்கையும்" என்ருர் முன்பும்.

ஈ. மாதுளம்பூ நிறத்தாள்.

(1) மாதுளம்பூப்போல் திருமேனி நிறத்தினைப் பெற்றவள்.

(2) பூ மலருவதுபோல் பூத்தவள். பூவின் எழில்மிகு நிறத்தையும் பெற்றவளாக இருக்கிருள் என்பதை உணர்த்த "மாதுளம்பூ நிறத்தாள்" என்ருர். "மாதுளம்போது" என்ருர் முதற்பாடலிலும்.

உ. புவியடங்கக் காத்தாள்.

(1) உலகம் முழுவதையும் காப்பாற்றுகின்றவளும் அவளே தான்!

(2) எதனையும், விடாது, விலக்காது உள்ளடக்கிக் காப்பதால் "புவியடங்கக் காத்தாள்" என்ருர். குறிப்பிட்ட ஆசிரியர் இயற்றிய, அல்லது குறிப்பிட்ட தலைப்பின் கீழ்உள்ள படைப்புக்கள், அனைத்தையும் உள்ளடக்கிய தொகுப்பு நூலினை 'அடங்கல் முறை' என்கிருேம். அனைத்தையும் உள்ளடக்கிய நூல் என்பதே அதன் பொருள். அதுபோல் "புவியடங்கக் காத்தாள்" என்ருர்.

(3) அமுதம் கடையும்நாள் ஆலம் வெடித்துத்
திமுதமெனத் தீயெரித்துச் சென்றது — அமுதமெனத்
தீக்கடவுள் உண்டார் திருக்கண்டத்தைப் பிடித்துக்
காத்ததனல் பூமி காத்தாள்.

என்கிறார் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள். அதாவது இறைவன் நஞ்சுண்டபொழுது இறைவனின் திருமேனியின் உள்ளும் புறமும் உள்ள உயிர்கள் அழியாதிருக்க அன்னை அவனது கழுத்தைப் பிடித்து நஞ்சை நிறுத்திக் காத்ததனால் பூமிகாத்தாள் என்று புகழப்படுவதாக உரைக்கிறார். அதன்படி இறைவன் நஞ்சுண்ட காலத்திலும், மற்றைக் காலத்திலும் இருநாழிகொண்டு எண்ணான்கு அறஞ்செய்து காப்பதால் "புவியடங்கக் காத்தாள்" என்றார்.

ஊ. அங்குசம், பாசம், குசுமம், கரும்பும் அங்கை சேர்த்தாள்.

(1) அழகிய திருக்கரங்களில் பாசாங்குசமும், மலர்க்கணையும், கரும்பு வில்லும் அணியெனச் சேர்த்து வைத்துத் திகழ்பவள். குசுமம் – மலர்.

(2) திரிபுரசுந்தரி, காமாட்சி போன்ற கோலங்களில் அம்பிகை அவற்றினைத் தாங்கி நிற்கிறாள். திருக்கடவூர் அபிராம வல்லிக்கும் அவை அணிகலனாய்ச் சாத்தப்படுவது உண்டு. அவை உணர்த்தும் தத்துவங்களை முன்னரே கண்டோம்.

எ. முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கு இல்லையே.

(1) மூன்று கண்கள்பெற்ற அம்பிகையை வழிபடும் அடியவருக்கு எந்தவிதமான இன்னலும் இல்லை.

(2) 'சிவசக்தி ஐக்ய சொரூபிணி' யாகியதாலும், அவளுக்கே மூன்று கண்கள் இருப்பதாலும் அவளை முக்கண்ணி என்றார். 'திரிநயனா' என்பது சகஸ்ரநாமம். ஆதியாத்மிகம், ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம் போன்ற மூவகை இடர்களும் இல்லையாக்கி விடுவாள் என்பதையுணர்த்த 'முக்கண்ணி' என்றார்.

(3) ஏனைய சமய நூல்களின் நூற்பயன் பகுதிகளினின்று அபிராமி அந்தாதி நூற்பயன் வேறுபட்டு நிற்கிறது. ஏனையவை குறிப்பிட்ட பயனைக்கூறும். அதாவது "கல்வி வேண்டுவோர்க்குக் கல்வியும், செல்வம் வேண்டுவோர்க்குச் செல்வமும் முத்தி வேண்டுவோர்க்கு முத்தியும் கிட்டும்" என்றெல்லாம் கூறும்.

உலகின் எப்பகுதியினரும், எம்மதத்தவரும், எக்காலத்திலும் 'தமக்குத் தீங்கு நிகழவேண்டும் என்று விரும்பமாட்டார்கள் 'தீங்கை விரும்பாமை' ஆண் - பெண், ஏழை - பணக்காரர். இளையோர் – முதியோர், கற்றுர் – கல்லாதார் ஆகிய அனைவரின் பொதுவான இயல்பாகும். ஆகவே பட்டர் மானுட வர்க்கத்துக்கே பொதுவான நூற்பயனைக் கூறினார். இவ்விதத்தில்தான் பட்டர் உலகப்பொது நோக்குடனும், வேறுபட்டும்; தனித்தும், சிறப் புற்றும் திகழ்கிறார்.

(4) மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்கும் காலைத்
தானதனுக் கிடையூறு தன்னால் தன்பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்கள்தம்மால்
ஆனபயம் ஐந்தும் தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?

என்பார் சேக்கிழார். அவ்வகையில் அனைத்துலகப் பேரரசியாக - ராஜராஜேஸ்வரியாக அரசாளும் அம்பிகை மேற்கண்ட ஐந்து வகையான இடையூறுகளும் இன்றிக் காப்பவள். ஆதலால் உயிர் களுக்கு ஒரு தீங்கும் இல்லை.

(5) "என் உள்ளத்தினுள்ளே இருப்பள் இங்கு வாராது இடர்" என்று கம்பனும் தனது சரசுவதியந்தாதியில் உரைத்தான்.

(6) இப்பாடலில் அந்தாதியின் நூற்பயனே உரைத்தார். ஆனால் முக்கண்ணியைத் தொழுவார்க்குத் தீங்கில்லை என்கிறார். தனது நூலினைத் தானே சிறப்பித்துக் கூறாது, தன்னடக்கத்துடன், நூலின் நாயகியைச் சிறப்பித்தார்.

இறைவனும் இறைநூல்களும் இரண்டல்ல என்பது சான்றோர் கொள்கை. திருமுறைகளைச் சைவர்கள் சிவபெருமானாகவே எண்ணி வழிபடுவர், வைணவர்கள் அருளிச்செயல்களைப் படிக்கும் பொழுது 'சேவித்தல்' என்றே குறிப்பிடுவர். அவ்வகையில் அந்தாதியைச் சேவித்தலும் அம்பிகையைச் சேவித்தலும் ஒன்றே யாகும். ஆதலால் "முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லை" என்றார்.

உலக நாயகியைப் போற்றும் அந்தாதியைப் படித்து உலகம் இடர் இன்றி இன்பம் எய்துவதாகுக.

(அடுத்த இதழில் 'பார்வதி திருமணம்' பற்றிய கட்டுரை யுடன் இத்தொடர் நிறைவுபெறும்.)

(தொடரும்)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47, இதழ் 10, பக்கம் 586 இன் தொடர்ச்சி.)

3. அரிஸ்டாட்டில் (Aristotle) - தொடர்ச்சி (5)

(கி. மு. 384-322)

முக்கூற்று நியாய விவாதத்தின் முன்வரும் தப்பிதங்கள் :

முக்கூற்று நியாய விவாதத்தில் (in Syllogistic Reasoning) தப்பிதங்களும் (Fallacies) முன்வருவதுண்டு. அவற்றையும் அரிஸ்டாட்டில் சுட்டிக் காட்டிப் போகிறார். முக்கூற்று முறையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் அமைவில்லை என்றால் பல வகைக் குற்றங்கள் வருவதுண்டு: அவைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று அரிஸ்டாட்டில் அழுத்தமாக எடுத்தோதுகிறார். அவை அத்தனையும் நாம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. சில முக்கிய தப்பிதங்களை மட்டும் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

தெளிவின்மைத் தப்பிதம் :

எதையும் தெளிவுபட இயம்ப வேண்டும். இருபொருள் படவோ தெளிவின்மையோடோ இயம்பலாகாது. குழப்பத்தை உண்டாக்கும் எத்தகைய குறைபாடும் இன்றி எடுத்துக் கொண்ட பொருளை இயம்பவேண்டும். அஃதுஎவ்விதத் தப்பிதமான அர்த்தம் கொள்ளவோஇருக்கலாகாது. அப்படிக்குற்றத்தோடுகூறப்படுவது, தெளிவின்மைத் தப்பிதத்தில் (The Fallacy of Ambiguity) பாற்படும். இரண்டொரு உதாரணங்களைப் பார்க்கலாம்.

கிரேக்க சமுதாயத்தில் சாமியாடிகட்கு முக்கியத்துவம் தரப் படுவது உண்டு. அவர்கள் (Delphic Oracles) டெல்பிக் சாமியாடி கள் எனக்கூறப்படுவர். ஏற்கனவே சாக்ரட்டீஸ் பற்றிய கட்டுரையில் சாமியாடியரைச் சந்தித்துள்ளோம். "போரில் கிரேக்கர்கள்

அல்லது ரோமானியரா வெல்லுவர்?'' என்று சாமியாடியரைக் கேட்டால் அவர்கள் இருநிலைக்கும் பொருந்துமாறு பதில் இயம்புவதுண்டு. "போரில் வெல்லப் போகிறவர் ரோமானியர் அல்ல கிரேக்கர்கள்'' என்று கூறுவார்களாம். இஃது இருபொருளையும் உள்ளடக்கிக் கூறிய ஒன்ருகும். இது தெளிவின்மைத் தப்பிதத்தின் பாற்படும். சாமியாடியரின் பதிலில் இருவிதப் பொருள்கள் இருப்பதைக் காணலாம். அவையாவன :

" போரில் வெல்லப் போகிறவர் ரோமானியர்
அல்ல – கிரேக்கர்கள் "

" போரில் வெல்லப் போகிறவர் ரோமானியர் -
அல்ல கிரேக்கர்கள் "

இவ்விதத் தெளிவின்மைத் தப்பிதம் வாதத்தில் தர்க்க நெறியில் வரலாகாது என்று வற்புறுத்துவார் வான்புகழ் கொண்ட அரிஸ்டாட்டில்.

இதற்கு மேலும் இரண்டோர் உதாரணங்கள் தரலாம் :

" இப்படம் முருகன் படம் அல்ல கணபதி "

" கிரிகெட் விளையாட்டில் வெல்லப்போவது இந்தியா அல்ல இங்கிலாந்து "

" இவர் ஒரு கல்விக்கிரகம் " கல் விக்கிரகம் எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இத்தகைய குற்ற வாதம்தான் தெளிவின்மைத் தப்பிதம் (Fallacy of Ambiguity) எனப்படும்.

சந்தர்ப்பவாதத் தப்பிதம் :

சிலர் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப, சில வார்த்தைகளைப் பேசிச் சமாளிப்பர். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பவாதிகள் செய்யும் பிழைக்குச் சந்தர்ப்பவாதத் தப்பிதம் (Contextual Fallacy) என்று பெயர். இஃது இவ்வுலகில் பெரிதும் காணப்படுகிறது. தர்க்கமுறைப்படி இதுவும் தவிர்க்கப்படவேண்டும் என அழுத்தமாக எச்சரிக்கிருர் அரிஸ்டாட்டில்.

தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் இப்பிழையை அதிகம் புரிவதைக் காணலாம்.

"எங்கள் கட்சிக்கு ஓட்டளித்து வெற்றி பெறச் செய்தால் உங்களுக்கு ஒருருபாய்க்கு மூன்றுபடி அரிசி கிடைக்கச்செய்வோம்" என்று வாக்களிப்பார்கள். இது சந்தர்ப்பத்தில் செய்யும் சத்தியமே அன்றே சாத்தியப்படும் காரியம் ஆகுமா?

நண்பர்களிடையேயும் இதனைக்காணலாம் - காதலர்களிடையேயும் காணலாம்.

"நண்பா! உனக்கு ஏதேனும் கஷ்டம் வந்தால் உன்னை உயிர் கொடுத்துக் காப்பேன்."

காதலர் இடையே சாதாரணமாக இத்தகைய உணர்ச்சி வசப்பட்ட சந்தர்ப்ப சாகசப் பேச்சைக் காணலாம்.

"நாமிருவரும் ஒருயிர் – ஈருடல்" என்பார்கள். நவீன காலத்தில் இவ்விதப் பேச்சு நாடெங்கும் காணலாம். ஆனால் நடைமுறையில்......?

ஒரு டியோட்டோரியல் கல்லூரி ஒரு விளம்பரம் செய்தது: "எங்கள் கல்லூரியில் எம். ஏ. பரீட்சைக்கு அனுப்பிய மாணவரில் 100% தேர்வு பெற்றனர்" என்று விளம்பரப்படுத்தப்பட்டது. விசாரித்தால் அக்கல்லூரி எம். ஏ. பரீட்சைக்கு ஒரே மாணவனைத் தான் அனுப்பியது.

இன்னொரு விளம்பரம் :

'எங்கள் இம்பீரியல் சிகரட் இழுக்க இழுக்க இன்பம்தரும்'

அரிஸ்டாட்டில் இத்தகைய சந்தர்ப்பவாதத் தப்பிதங்களை அடியோடு தவிர்க்கவேண்டும் என அறிவுறுத்துகிறார்.

'சந்தர்ப்பத்திற்கு வேண்டாத மேற்கோள்' தப்பிதம் :

சிலர் சந்தர்ப்பத்திற்கு வேண்டாதபடி மேற்கோள் கூறி மிகைப்படுத்திக் கூறுவது உண்டு. இஃது ஓர் அடியோடு நீக்கப்பட வேண்டிய பிழையாகும். இதற்குச் "சந்தர்ப்பத்திற்கு வேண்டாத மேற்கோள்" தப்பிதம் (The Fallacy of Quoting out of Context) என்று பெயர்.

ஒரு பத்திரிகைக்கு ஒரு புத்தகம் விமர்சனத்திற்காக வந்தது. அந்த விமர்சகர் சற்று விஷமத் தனம் உள்ளவர். அவர் எப்படி விமர்சித்தார் தெரியுமா?

"ஆகா! அருமையான புத்தகம். உலகத்தில் இது ஒரேபுத்தகம் தான் உண்டு வேறு புத்தகமே இல்லை என்றால், இப்புத்தகத்தை நான் நிச்சயமாகப்படிக்க நேரிடும் அல்லது நான் ஒரு பாலைவனத் தீவில் பரிதவிக்குமாறு மாட்டிக் கொண்டேன் என்றால் இப் புத்தகத்தை ஒருவேளை படிக்கமுன்வர நேரலாம். மற்ற சந்தர்ப்பத் தில் தொடவும் மாட்டேன்."

ஒரு கிருத்துவ சமய வெறியர் கூறினர். "உலகிலுள்ள நூல் களில் உன்னதமான ஒரே நூல் விவிலிய நூல் (Bible) தான் - வேறில்லை''.

இத்தகைய சந்தர்ப்பவாத மேற்கோள்களைத் தவிர்த்து, தர்க்க முறையின் தன்மையைக் காக்க வேண்டுவது தர்க்கவாதியின் கடைமையாகும்.

மனிதர்க்கு மனிதர் எதிர்வாதத் தப்பிதம் :

இஃது ஒரு விளக்கற்குக் கடுமையான - ஆனல் சாதாரண மாகக் காணக் கூடிய பிழையாகும். இதில் வாதம் ஒரு குறிப்பிட்ட மனிதனை நோக்கியோ, கட்சியை நோக்கியோ, அல்லது ஒரு சமுதாயத்தை நோக்கியோ வாதிடுவதால் ஏற்படும் தப்பிதம் (Fallacy of Argumentum ad Hominem) ஆகும். ஒரு மனிதனுக்கு எதிராக, அவன் கூற்றுக்கு எதிராக இல்லாமல், அவர் கூறுவது உண்மையல்ல என்று சாதிக்கச் செய்யும் பிழை - என்பதை இச் சொற்றொடர் குறிப்பிடுகிறது. இஃது அரசியல் வாதிகளிடம் அதிகமாகக் காணலாம்.

அமெரிக்காவில் ஒரு ஜனநாயகக் கட்சி வேட்பாளனும்(Democratic Party Camdidate) எதிர்க்கட்சி யான குடியரசுக்கட்சி வேட் பாளனும் (Republican Party Candidate) இங்ஙனம் தாக்கிப் பேசிக்கொண்டனர்.

ஜனநாயகக்கட்சியாளர் : "அமெரிக்க நாட்டின் கௌரவம் அழகாக சர்வதேச அரங்கில் காக்கப்படவேண்டும். உண்மையில் அணுகுண்டு சோதனை நாளடைவில் நம்முடைய சுற்றுச் சூழலுக்கு நஞ்சூட்ட வல்லது. எம் கட்சி அச்சோதனையை ஆற்றுது. எங்களுக்கு வாக்களியுங்கள்."

குடியரசுக் கட்சியாளர் : "அமெரிக்க நாட்டின் கௌரவம் அமோகமாக சர்வதேச அரங்கில் மேலோங்கி நிற்க வேண்டும், அணுசக்தி சோதனை நம் அந்தஸ்த்தையும் செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் ஆற்றலையும் உலகில் மேலோங்கச் செய்கிறது.

எதிர்க்கட்சி இராணுவ பட்ஜட்டைக் குறைக்கிறது. அது நம் அந்தஸ்தைக் குறைக்கும்; நம் கௌரவத்தைக் குறைக்கும். ஆகையால் இந்த எதிரிக்கு வாக்களிக்காதீர்கள். அமெரிக்க ஆதிக்கத்தைக் காக்கும் எங்களுக்கு வாக்களியுங்கள்"

இது நேர்மையை விட்டு மனிதர்க்கு மனிதர் தாக்கிக் கொள்ளும் வாதம். எனவே தர்க்கத்தின் தரத்தைக் குறைக்கக் கூடியது. இத்தகைய தர்க்கப் பிழையைத் தவிர்க்கவேண்டும்.

அதிகாரச் சான்று வாதத் தப்பிதம் :

சிலர் ஓர் அதிகார வலிமை சான்ற மனிதரை - ஆசாமியைச் சான்ருகக் காட்டி வாதிடுவர். அதனுல் தப்பிதம் ஏற்படுகிறது. இதனை அதிகாரச் சான்று வாதத் தப்பிதம் (The Fallacy of Arguing from Authority) என்று குறிப்பிடலாம்.

நேரு சொன்னுர். ஹிட்லர் இங்ஙனம் பகர்ந்தார். லெனின் இவ்விதம் கூறினர். இவ்விதம் கூறி வாதத்தை வலுப்படுத்த முயல்வது தர்க்கத்தில் தகாது. அவர்கள் கூறிய வார்த்தைகள் வாய்மையுடையனவாக இருக்கின்றனவா? பொருத்தமானதாக உள்ளதா? தர்க்கநெறிக்குத் தக்கதாக உள்ளதா? என்பதை ஆய வேண்டுமே அன்றி ஆள்பலத்தைக் கூறித் தர்க்கிக்கலாகாது.

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

என்ற வள்ளுவம் இங்கே வாதப் போக்கிற்கும் பொருந்துவதாகும். அரிஸ்டாட்டில் இத்தகைய வாதத்தை அறவே வெறுக்கிருர்.

வினு விரைஞ்சல் தப்பிதம் :

ஒருவன் ஒரு விஷயத்தைச் சொல்லுகிருன். இன்னெருவன் எதிர்த்து வாதிக்கும் போது திரும்பத் திரும்ப அக்கேள்விக்குச் சொன்னதையே பதிலாகக் கூறுவது பிழை ஆகும். இதனை வினு விரைஞ்சல் தப்பிதம் (Fallacy of Begging the Question) எனக் கூறலாம். இது "சுற்ருன விதண்டா வாதம்" (Circular argumentation) எனவும் குறிக்கப்படும்.

(உதாரணம்)

" பைத்தியம் எப்போது தெளியும்? "

" திருமணம் செய்தால் "

" திருமணம் எப்போது செய்வது?"

" பைத்தியம் தெளிந்தால் "

" பைத்தியம் எப்போது தெளியும்?"

இப்படியே வட்டமாக வந்த இடத்திற்கே வந்து கொண்டிருப்பதும் வாதத்திற்கு ஒவ்வாது.

அறியாமை வாதத் தப்பிதம் :

சிலர் ஒருண்மையை எடுத்துக் கூற, அறியாமையால் மற்றொருவர் வாதிடுதல். இதனை அறியாமை வாதத் தப்பிதம் (Argumentum ad Ignorantium) என்று கூறுவர். "கடவுள் இருக்கிறார்" என்பது உண்மை. இதற்கு எதிரிடையாக ஒருவன் ஆதாரம் காட்டி வாதிட இடமில்லை. அப்படி வாதிடுவது அறியாமையின் பாற்படும்.

இப்படித் தர்க்கமுறையில் அநேக தப்பிதங்கள் வருவதை எல்லாம் அரிஸ்டாட்டில் அருமையாகச் சுட்டிக் காட்டுகிறார். இப்படி மேலும் பலப்பல தர்க்கத் தப்பிதங்கள் சுட்டிக்காட்டப் படுகின்றன. அவற்றை முழுதும் ஆராயின் அளவுக்கு அடங்கா- எனவே மேற்கூறிய சிலவற்றைச் சிந்தனைக்கு எடுத்துக் காட்டி யதே போதுமானது.

தர்க்கம் (Logic) அரிஸ்டாட்டில் உண்டாக்கிய அறிவியல் தொகுதியில் முக்கிய அங்கம் வகிக்கிறது. எனவே இதனை இடை யிலே எடுத்துக்கொண்டோம். ஏனெனில் தர்க்கசாத்திரம் "அறிவி யல்களுக்கெல்லாம் அறிவியல்" ஆகும் (The Science of Sciences) என்பர் அறிஞர் பெருமக்கள்.

அடுத்து, அரிஸ்டாட்டில் பெருமகனாரின் அரசியல் தத்துவம் பற்றி ஆய்வோமாக!

ஆதார நூல்கள் :

A History of Western Philosophers by Bertrand Russell.
Basic Teachings of Great Philosophers by S. E. Frost
100 Great Thinkers by Jay E. Greene
Living Blographies of Great Philosophers by Thomos &Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி கூறும் சம்பந்தர் பெருமைகள்

முனைவர் திரு. தா. ஈசுவரபிள்ளை

தஞ்சாவூர்.

தமிழ் மொழியிலுள்ள சிற்றிலக்கிய வகைகளுள் அந்தாதி இலக்கிய வகையும் ஒன்று ஆகும். செய்யுளின் ஈற்றில் உள்ள எழுத்து அல்லது அசை அல்லது சீர் அல்லது சொல் அல்லது அடி இவற்றுள் ஒன்று அடுத்த செய்யுளின் தொடக்கமாக வரும்படி பாடுதல் அந்தாதி எனப்படும். ஆளுடைப்பிள்ளையார் திருவந்தாதி என்ற இந்நூலில் கட்டளைக் கலித்துறையிலான 100 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் நம்பியாண்டார் நம்பி தம்மை நாயகியாகவும் ஆளுடைப்பிள்ளையாரை நாயகனாகவும் கொண்டு பாடியுள்ளார். இந்நிலையில் ஆளுடைப்பிள்ளையாரின் பெருமைகளைப் பலப்பட எடுத்து மொழிகின்றார்.

ஆளுடைப்பிள்ளையாரின் சிறப்புகள் :

ஆளுடைப்பிள்ளையார் உமையம்மையின் அருள் பெற்றவராகவும் உமையம்மையுடன் கூடிய இறைவனருள் பெற்றவராகவும் காட்டப்பெறுகின்றார். மேலும் பிரம்மபுர நகரின் அரசர், சீகாழித் தலைவர், கௌணியர் குலத்தலைவர், இவ்வுலகில் கலந்துறையும் பிற சமயங்களுக்குச் சிங்கம் போன்றவர், சமணர்களைக் கூட்டமாகக் கழுவேறச் செய்தவர், உலகமெல்லாம் துதித்துக் கொண்டாடும் நற்பண்புடையவர், சைவ சிகாமணி, வலிய சமணர்களுக்கு வைவை ஆற்றங்கரையில் விண்ணுலகைக் கொடுத்தவர் இறைவனைத் தன் மெல்லிய விரலால் தோடணிந்த காதினன் எனத் தந்தைக்கு விசும்பில் சுட்டிக் காட்டியவர், தமிழ் உணர்ந்தவர் உலகோர் துன்பம் கெட இறைவன் மீது பதினாறாயிரம் பதிகம் பாடியவர், திருநனிபள்ளி என்ற இடத்தைக் கானகமாக மாற்றி மலர் நிறைந்து விளங்கும் வயலாக்கிய தலைவன், இறைவன் திருவடிகளை ஏந்தியவர், அழகிய சொற்களாலாகிய பாடல்களைப் பாடியவர், தொண்டர்களுக்கு இன்பம் கொடுக்கும் 'அமுதம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியவர், குழல் போன்ற இனிமையுடைய கவிதைகளை இயற்றியவர், தமிழால் சிறந்த யாழ் மூரி செய்தும், ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியும், கொடிய

விடத்தைத் தீர்த்தும், திருக்கதவை அடைத்தும் பெருவெள்ளத்தில் ஓடத்தை எதிரச் செய்தும், புகலியில் பால்உண்டும், கோலக்காவில் பொற்றாளம் பெற்றும், திருவாவடுதுறையில் வேள்வி செய்யப் பொன்பெற்றும், திருநெல்வாயில் அறத்துறையில் பொற்சிவிகை ஏறியும், காசுமழை பொழியச் செய்தும் அற்புதங்கள் நிகழ்த்திய வர், வேதமாகிய காடுகள் வளரும் மலையைக் கடந்தவர், பாண்டியனின் துன்பம் நீக்கியவர் என ஆளுடைப்பிள்ளையார் இறையருள் பெற்ற சிறப்பு, தமிழ்ப்பற்று, குலப்பெருமை, சைவ சமய அறிவு, பிற சமயங்களின் ஆற்றல் குறைத்தமை, இறைப் பற்று என்பனவற்றை அவர் பாடிய தேவாரப் பதிகக் கருத்துக்க ளுடனும் பெரியபுராணப் பாடல்களுடனும் பொருந்தும் நிலையில் ஆசிரியர் புகழ்ந்துள்ள நிலை மனதைக் கொள்ளைகொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

உறுப்புச் சிறப்புக்கள் :

தாமரை மலர்களாலான மாலை அணிந்தமுடி என்றும், திருநீறு அணிந்த நெற்றி என்றும், மலர்போன்ற ஒளியுடைய கண்கள் என்றும், மேகம் போன்ற கறுத்த கழுத்து என்றும், மேகம் போன்று அருள் மழையைப் பொழியும் கைகள் என்றும், மலை போன்ற பருத்த விசாலமான தோள்கள் என்றும், தாமரைமலர் போன்ற கண்களால் பார்க்க, இனிமையுடைய செவிகளால் கேட்க, இன்பம் தரக்கூடிய மனதால் எண்ணுதற்குரிய, சிறுமிகள் கொண்டு விளையாடும் தன்மையுடைய, பொன்போன்ற அடிகள் என்றும் சம்பந்தப் பெருமானின் உறுப்பின் பெருமைகளும், பண்பு களும், அழகும், நிறமும் ஆசிரியரால் வருணிக்கப் பெறுகின்றன.

சம்பந்தரை வணங்குவோர் அடையும் நன்மைகள் :

சம்பந்தப் பெருமானை மனத்தால் உள்ளார எண்ணி வணங்கு வோர் தேவஉலகைக் காப்பவர் ஆவர், தேவர்களால் தொழத்தக்க பேறுபெறுவர். இறைவனின் பொன்னுலகை உண்மையாக அடைவர், அவர்களுக்கு நரகம் இல்லை, தவமாகிய அருளை அடைவர், இறைவன் அடிகளை அடைதல் எளிது என்று கூறும் ஆசிரியர் சம்பந்தரை வணங்காதவர் புலையராவர், நரகில் வீழ்ந்து தளர்வடைவர், கெட்டுப்போய்ப் பேய்த்தன்மை அடைவர், உலகத் துன்பங்களால் அல்லல் உறுவர், மோகம் என்ற சுழியிடை அகப் படுவர் என அறுதியிட்டுக் கூறுகிறார். இவ்வகையில் ஆளுடைப் பிள்ளையார் திருவந்தாதி சம்பந்தப் பெருமான் பெருமைகளைப் போற்றுதல் படித்து மகிழ்தற்குரியதாகும்.

அப்பர் வழங்கிய ஆன்மீகச் செல்வம்

டாக்டர் இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

(மலர் 47, இதழ் 11, பக்கம் 591 இன் தொடர்ச்சி.)

தொண்டுசெய்தலையே வாழ்வாகக்கொண்ட அப்பரடிகள் தொண்டராகிய தமக்கும் தலைவனாகிய இறைவனுக்கும் இடையே நிலவவேண்டிய உறவை வெளிப்படுத்துமிடம் உன்னதமானது. கடம்பூர்த் தேவாரப் பதிகத்தில் "நங்கடம்பனை" - எனத் தொடங்கும் பாடல் ஒன்றில்,

" தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே "

என்று உரிமை முழக்கமிடுகின்றார். கடமை செய்தார் உரிமை பெறுவதற்கு உரியார் என்ற உயர்ந்த தத்துவத்தினை அப்பரடிகள் அழகுறப் பதிவுசெய்கின்றார். "என்கடன் பணிசெய்தல்" - என்னாது 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' - என்று முடித்த நயம் எண்ணத்தக்கது, கிடத்தல் - என்றசொல் 'செயலற்றிருத்தல்' - என்ற பொருளில்வருவது. ஒவ்வொரு மனிதனுக்கும் சிலகடமைகள் உண்டு. அவற்றை அவன் இயற்ற வேண்டுவது சமூக ஒழுங்கிற்கு இன்றியமையாத ஒன்று. அதனைத் திறமறிந்து இயற்றுவான் ஒருவன், 'நான் இயற்றினேன்', 'என்னால்தான் நடந்தது', 'நான் இல்லாவிட்டால் சிறிதும் நடந்திராது' என்ற எண்ணம் சிறிதுமின்றி மனத்தால் அடங்கியிருக்கும் பண்பாட்டுத் திறத்தையே 'கிடத்தல்' - என்ற சொல்லால் அப்பரடிகள் பதிவு செய்கின்றார். 'பணிசெய்தோம்' என்ற இறுமாப்புச் சிறிதும் இலராய்ப் பணி செய்தாரைக் காக்கவேண்டிய கடமை இறைவனுக்கு உரியது என்பதையும் அவன் காவல் முன்னதாக உறுதி செய்யப் பட்டாலல்லாது கடமை சிறவாது என்பதையும் "தன்கடன் அடியேனையும் தாங்குதல்" என்ற தொடரால் சுட்டும் திறம் எண்ணி எண்ணி மகிழத்தக்கது.

சமூக வாழ்விற்கும் இவ் அரியதொடர் பொருந்தி வருவது. அப்பரடிகளின் உலகியல் அனுபவத்தைப் பறைசாற்றுகின்றது.

'என்கடன் பணிசெய்து கிடப்பதே' - என்ற உணர்வோடு பணிதொடங்கி நடத்தும்போது இடையூறு நேரிட்டால் என்ன செய்வது? என்ற வினா பிறக்கிறது. இடையூற்றிற்குத் தலைசாய்த்து ஒதுங்கி விடுவதா? இடையூற்றினை எதிர்த்துப் போரிடுவதா? இடையூற்றினை எதிர்த்துப் போரிடுவதனால் சமயம் சார்ந்த தொண்டர் ஒருவர் எவ்வாறு போரிடுவது? வன்முறைப் போராட்டமா? இல்லை வேறு சாத்துவிக நெறிப் போராட்டமுண்டா? என்ற வினாக்கள் அடுக்கடுக்காக நம்முன் எழுகின்றன. அப்பரடிகள் அதற்கும்விடை தருகின்றார். எவ்வுயிர்க்கும் தீங்குநேராது அகிம்சை என்ற நெறி நின்று தன்னைத்தானே வருத்திக்கொள்ளும் சத்தியாக்கிரகம் என்ற பெருநெறி அப்பரடிகளால் கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் முதன் முதல் அறிமுகப்படுத்தப்படுகிறது. 20 ஆம் நூற்றாண்டில் காந்தியடிகள் மேற்கொண்ட அகிம்சை நெறியிலான சாத்துவிகப் போராட்டம் என்று வருணிக்கப்பட்ட சத்தியாக்கிரகம் 1300 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ் நாட்டில் ஒரு சமயச் சான்றோரால் அறிமுகப்படுத்தப்பட்டவொன்று என்பது நமக்குப் பெருமை தருகின்றது.

அப்பரடிகள் குடந்தையை அடுத்த பழையாறை சென்று வழிபாடு நிகழ்த்த எண்ணுகின்றார். அங்கே சென்றபோது வடதளி என்ற பெயர் கொண்ட சிவாலயம் மறைக்கப்பெற்று அமணர்களின் விமானமாகக் காட்சிதரக் காணுகின்றார். உறுதி மிக்க அப்பரடிகள் அடியார்கள் புடைசூழ வடதளி வாயிலில் "வண்ணம் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்" என்று உறுதியோடு உண்ணாவிரதம் மேற்கொண்டு அமருகின்றார். இறைவன் அருள் அசரீரி வாயிலாக மன்னனிடம் வெளிப்படுகிறது. மன்னன் விரைந்து போந்து சமண்பள்ளியை அகற்றி உள்ளே மறைந்து கிடந்த வடதளிச் சிவாலயத்தை வழிபாட்டுக்கு உரியதாக்கு கின்றான். மகிழ்ந்த அப்பரடிகள் மன்னனைப் போற்றி "வடதளிப் பெருமானை,

" தலையெலாம் பறிக்குஞ் சமண்கையருள்
நிலையினான் மறைத்தால் மறைக்கொண்ணுமோ
அலையினார் பொழில் ஆறை வடதளி
நிலையினானடியே நினைந்துய்ம்மினே "

என்று தொடங்கும் பதிகம் பாடி வணங்கிச் செல்கின்றார். நியாயம் கிடைக்கத் தன்னைத் தானே வருத்திக் கொண்டு போராடும் சத்தியாக்கிரகப் பெருநெறி அளவற்ற மனத்திண்மை உடையரால் மட்டுமே மேற்கொள்ளவல்லது. உரிமைகளைப் பெற இரத்தம் சிந்தும் போராட்டங்களை நிகழ்த்துவதைவிட மக்களை உரிய

பிரச்சனைகளின் ஈர்க்கவும் ஒருமுகப்படுத்தவும் சத்தியாக்கிரகமே சரியானவழி என்று கண்டு காட்டிய அப்பரடிகளின் மன உறுதி நம்மை இறும்பூது எய்திட வைக்கின்றது.

சங்கஇலக்கியங்கள் தொழில் வழிப்பட்ட சமூகப்பிரிவுகளையே சித்தரிக்கின்றன. பிற்காலத்தே தொழில் வழி உருவான சாதிய நெறிகளையும், அவற்றிடையே உருவான ஏற்றத் தாழ்வுகளையும் அங்கே காண இயலவில்லை. வருணம், குலம், சாதி, சாதி பற்றிய சாத்திரக் கூறுகள் எல்லாம் வளர்ந்து தலைவிரித்தாடிய காலம் கி. பி. 7 ஆம் நூற்றுண்டு என்பதை அப்பரடிகளின் பனுவல்கள் நமக்குத் தெள்ளத் தெளிய எடுத்துரைக்கின்றன.

சமயம் என்பது பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடக்கும் ஒரு சமூக மக்களை ஒன்றுபடுத்தும் ஒரு பெரிய சக்தியாகக் கருதத் தக்கது. உறவு, சாதி, இனம் மொழி என்பனவற்றையெல்லாம் விட மக்களை ஒன்றுபடுத்தும் பெரிய சாதனமாகச் சமயம் விளங்க வல்லது.

சைவசமயத்தவர், சிவனடியார் என்ற பெருநிலையில் பிறவகை பேதங்களை மறந்து ஒன்றுபடவேண்டிய மக்கள் - சமயவாழ்வை ஏற்றுக் கொண்ட பிறகும் தம்முள் சாதி, குலம், எனப் பேதப்பட்டு நிற்றலைக் கண்டு அப்பரடிகளின் திருவுள்ளம் விம்முகின்றது. கடும் சொற்களைக் கையாளாத அப்பரடிகள் சாதி பேதங்களைச் சாடும் போது சற்றே கடுமையான சொற்களைக் கையாளுகின்றார். அவரது உள்ளத்திலிருந்த சினம் சொற்கள் வாயிலாக வெளிப் படுகின்றது.

> "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
> கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்"

என்ற வெளிப்பாட்டில் 'கோத்திரமும் குலமும் கொண்டு' – என்று சாத்திரத்தைச் சான்று காட்டுவாரை எள்ளிநகையாடுகின்றார். அன்னோரைச் 'சழக்கர்கள்' என்ற கடுஞ்சொல்லாற் குறிக்கின்றார்.

சிவன் இறைவன், அவன் அருள்பெரிது. அவனை வணங்கினல் ஒரு நொடியில் எல்லாம் கைகூடும் என்று அவன் சந்நிதியில் ஒன்றுபடும் குணமிலராய்ச் சாதி பேதங்களால் சமூகத்தைப் பேதப்படுத்திப் பிரிக்க நினைப்பாரைச் சாடும் அப்பரடிகள் சமய வழியில் சமூக ஒருமைப்பாட்டுக்கு வித்திடும் திறம் புலனுகின்றது. சாதி குலங்களால் வேறுபட்டு இருப்பாராயினும், நோயால் நொந்து கிடப்பாராயினும் அவர்களையெல்லாம் ஒன்றுகக் கருதி ஈடேற்ற, சமயம் என்ற பெருநெறி ஒன்றைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று தெளிந்த அப்பரடிகள் மேலும் ஒருபடி கடந்து,

" அங்கமெலாம் குறைந்து அழுகுதொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்ப ராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே "

என்று அருளிச் செய்கின்றார்.

மனித குலம் பேதங்களை விடுத்து ஏதேனும் ஒரு பொது அடிப்படையில் ஒன்றுபடுமானால் சமூகவளர்ச்சி என்பது எவ்வளவு உன்னதமாக அமையும் என்று எண்ணும் அப்பரடிகளின் உயர் நெஞ்சம் இங்கே புலப்பட்டுத் தோன்றுகின்றது. பேதங்களைவிட்டு ஒருமைகாண விழைவாரைக் கடவுளராகக் கருதித் தாம் வணங்க இயலும் என்ற உயர்வான நெஞ்சம் அப்பரடிகள் வழங்கும் ஆன்மீகப் பெருநெறியாக விரிகின்றது. எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான் என்ற உணர்விலராய்ச் சடங்குகளையே சமயம் என்று கருதிக் கங்கையிலும், காவிரியிலும் மூழ்கிக்கிடப்பாரைக்,

" கங்கையாடில்என், காவிரி ஆடில்என்
கொங்குதண் குமரித்துறை ஆடில்என்
ஓங்கு மாகடல் ஓதநீராடிலென்
எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே "

என எள்ளி நகையாடுகின்றார்.

புற அழுக்குகளை நீக்க நதிகளை நாடிச் செல்லும் மக்கள் சாதிபேதங்களிலும் ஏற்றத் தாழ்வுகளிலும் அழுந்திக் கிடக்கும் மன அழுக்குகளை நீக்கிக் கொள்ள முயலாது அவமே காலங் கழிப்பதைக் கண்டு சகிக்காத அப்பரடிகளின் நெஞ்சம் நன்கு புலனாகின்றது.

(தொடரும்)

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adhinam

Sri Vaidhyanathaswamy Devasthanam, Vaidheeswarankoil.

It is our good fortune to visit the famous and hallowed Vaidheeswarankoil. May the lord bless the people of India with good health and all prosperity.

15—10—88· (Sd) A. V. Ramakrishnan

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞானபோதம், சிவஞானசித்தியார் என்னும் இருநூல் களிலுமாக முதல் சூத்திரத்தின் முதல் அதிகரணக் கருத்துக்கள் இதுவரை சிந்திக்கப்பெற்றன. இனி, தொடர்ச்சியாக இருநூல் களிலும் உள்ள இரண்டாம் அதிகரணக் கருத்துக்களை எண்ணுவது பொருத்தமாகும்.

சிவஞானபோதம் :

இரண்டாம் அதிகரணம், முதல் நூற்பாவிலுள்ள "தோற்றிய திதியே; ஒடுங்கி மலத்துளதாம்" என்னும் தொடரினை விளக்க வந்தது ஆகும். 'தோற்றிய திதியே' என்பதனால் உலகம் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளே என்பதும், (உளதாம் என்னும் சொல்லினை ஒடுங்கி என்னும் சொல்லோடும் மலத்து என்னும் சொலலோடும் கூட்டி) 'ஒடுங்கி உளதாம்' என்பதனால் தோன்றும் பொழுது, ஒடுங்குவதற்கு இடமாய் நின்ற இறைவனிடத்தினின்றே தோன்றும் என்பதும், 'மலத்துளதாம்' என்பதனால் ஒடுங்கியது மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் மலபரிபாகமாதற்பொருட்டே என்பதும் இவ்வதிகரணம் விளக்க வந்த கருத்துக்களாம்.

உலகம் உள்பொருளே !

இங்கு உலகம் இல்பொருளா உள்பொருளா என்னும் கேள்விக்கு முதற்கண் விடை காணப்படுகிறது. பௌத்த மதத்தினர் உலகம் தோன்றி அழியும் என்பதனை உடன்பட்டு அங்ஙனம் தோன்றி அழியுமாயினும் அது இல்பொருளே என்றனர். முன்பு இல்லாததாய் இருந்து, பின்பு தோன்றி, அதன்பின் அழிந்து இல்லாது போய் விடுகின்ற உலகத்தை இல்பொருள் என்றலே முறையானதாகும்; இதனை உள்பொருள் என்று கூறுதல் பொருந்தாதென்பது அவர் கூறும் தடை. உலகம் இல்பொருளாயின் முயற்கோடு, ஆகாயத் தாமரை என்பவை போல என்றுமேயில்லாத பொருளாயிருத்தல் வேண்டும். ஆனல் இவ்வுலகம் காணப்படும் நிலையுடையதனால் இது இல்பொருளன்று. எனவே உலகம் உள்பொருள் என்பது உணர்த்தப் பெற்று, அவ்வுள்பொருள், செய்வோன் ஒருவனின்றிச் செய்வினை அடையாது என்னும் தன்மையுடையதாதலின் அதனைச் செய் விப்போன் ஒருவன் வேண்டும் என்று பதி உண்மையை நிலை நாட்டினர்.

முழுமுதற்கடவுள் யார்?

இரண்டாம் அதிகரண முதல் வெண்பா, முதல் இரண்டு வரிகள் ஒரு கருத்தையும் பின்னிரண்டு வரிகள் ஒரு கருத்தையும் விளக்குவது போல் அமைக்கப்பெற்றுள்ளது.

" இலயித்த தன்னில்இல யித்ததாம்ம லத்தால்
இலயித்த வாறுளதா வேண்டும் — இலயித்தது
அத்திதியில் என்னின் அழியாது; அவையழிவது
அத்திதியும் ஆதியுமாம் அங்கு "

என்பது அவ்வெண்பா. இதில் 'இலயித்தது' என்பது ஒடுங்கியது என்னும் பொருளைத் தருகிறது. இலயித்தது - ஒடுங்கிய உலகம்; இலயித்த தன்னில் ஆம்-ஒடுங்கிய இடத்திருந்தே மீளத்தோன்றும்; மலத்தால் - கன்ம மலம், ஆணவ மலம் பரிபக்குவம் அடைதல் பொருட்டு; (கன்ம மலம் பரிபக்குவம் அடைதல் பொருட்டு உலகம் ஒடுங்கும்; ஆணவ மலம் பரிபக்குவம் அடைதல் பொருட்டு உலகம் மீளத்தோன்றும்.)

மீளத்தோன்ற வேண்டிய காலத்தில், ஒடுங்கிய உலகம் தோன்றுமா? வேறு உலகம் தோன்றுமா? எனில், ஒடுங்கிய உலகமே தோன்றுமென்றூர். நெல்லை விதைத்தால் நெல் விளையுமே அல்லாது கரும்பு விளையாது அன்றோ? அதே போலவே இதுவும் அமையும். இதனை, இலயித்தவாறு உளதா வேண்டும் - உலகம் எத்தன்மையதாய் நின்றுஒடுங்கியதோ அத்தன்மையுடையதாகவே மீளவும் தோன்றும் என்று கூறினர்.

உலகத்தைத்தோற்றுவிப்பவன், பானையை வனையும் குலாலன் போன்றவன் என்பதனைக் கூறி அக்குலாலன் திருமாலோ நான்முகனோ அல்லன்; இவர்களினும் மேலான பரம்பொருளே யாவன் என்பதனை வெண்பாவின் ஈற்று இரண்டு வரிகளால் விளக்குகிறார்.

உலகம் உள்பொருள் என்பதனையும் அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டதென்பதையும் ஒத்துக்கொண்டு அங்ஙனம் தோற்றுவித்தவன் நான்முகனே திருமாலோ ஆவர் என்று கூறாது சங்காரக் கடவுளே அவன் எனக்கூற வேண்டுவது ஏன்? என்பதற்கு அத்தொடர்கள் விளக்கம் தருகின்றன. பிரமனே முதற்கடவுள் என்னும் இரணிய கற்ப மதத்தாரும், திருமாலே முதற்கடவுள் என்னும் பாஞ்சராத்திரி மதத்தாரும் கூறும் வினாக்களே இவை.

இலயித்தது அத்தியில் என்னில் - உலகம் ஒடுங்கியது திதிக் கடவுளாகிய திருமாலிடத்தே எனக்கூறின்; அவை அழியாது - அத்திதிக்கடவுளாகிய திருமாலும் முதற்கடவுளர் ஆயின் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் அழியாதிருத்தல் வேண்டும்; (அவரும்

மகாசங்காரகாலத்தில் அழிவர் ஆதலின் அவர் முதற்கடவுளர் ஆகமாட்டார்) அத்திதியும் ஆதியுமாம் அங்கு அழிவது - அந்தத் திதிக் கடவுளும் மற்றும் படைப்புக்கடவுளும் மகாசங்காரகாலத்தில் ஒடுங்குவர். அங்ஙனம் அவர்களும் உலகமும் சேர்ந்து ஒடுங்க இடமாகும் மகாசங்கார காரணனாகிய பரம்பொருளே முழுமுதற் கடவுள் ஆவன் என்று விளக்கினார்.

மாயையும் கடவுளும் :

அடுத்த வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்டார் வேறொரு வினாவிற்கு விடை கூறுகின்றார். காரியமாகிய இவ்வுலகம் அதன் முதற்காரணமாகிய மாயையிடத்தே ஒடுங்கிப்பின் அம்மாயையிடத்தினின்றே மீளவும் தோன்றும் என்று கூறினால் குற்றம் என்ன? இது அவ்வினா. இதற்கு ஆசிரியர் அழகான ஓர் உவமையில் வைத்து விளக்கம் தருகின்றார். வித்தினின்றே முளை தோன்றுகிறது ஆயினும் அது அங்ஙனம் தோன்றுவதற்கு நிலைக்களமாக விளங்குவது நிலம் என்பதும் அதுவும் குளிர்ந்து பக்குவத் தன்மையெய்திய பொழுது என்பதும் கூறப்பெறும் உவமையாகும். அதுபோல உலகம் மாயையினின்று தோன்றுவது ஆயினும் அது அதற்குரிய நிலைக்களமாகிய கடவுளுடைய சக்தியினிடத்து இருத்தலாலே அங்ஙனம் தோற்றத்தைச் செய்கிறது என்பதனை உணர்தல் வேண்டும். இங்ஙனம் உலகத்தைத் தோற்றுவிக்கும் பொழுது, அது ஒரு வகையாகத் தோன்றாமல் பல வகையாகத் தோன்றுவதற்குக் காரணம் என்ன? என்று ஆராய்கின்றார். உயிர்களின் வினை பல்வேறு வகையாக இருத்தலின் பல்வேறு வகையாகப் பயன்படுமாறு உலகத்தைப் பல்வேறு வகையாகத்தோற்றுவித்தான் என்றும் உயிர்களின் வினைகாரணமாக அவைகள் வேண்டுகின்றவற்றை வேண்டியவாறே படைத்துக் கூட்டுவிக்கின்றான் என்றும் கூறுகின்றார். அங்ஙனம் அவன் கூட்டுவிப்பதற்குச் சிறந்த உவமையொன்றையும் தருகின்றார். குளவியாக விரும்பும் மகப்புழுவிற்குத் தாயாகிய குளவி, அப்புழு அங்ஙனம் வேண்டுவனவற்றைக் கொடுப்பது போல் இறைவனும் செய்கின்றான் என்று விளக்கம் தருகின்றார் ஆசிரியர். இக்கருத்துக்களை,

> "வித்துண்டா மூலம் முளைத்தவா தாரகமாம்
> அத்தன்தாள் நிற்றல் அவர் வினையால் — வித்தகமாம்
> வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத்தான்
> கூட்டானே மண்போல் குளிர்ந்து." [கொடுத்துக்

என்னும் வெண்பா விளக்குகிறது. "மண்குளிர்ந்து - வித்துண்டாம் மூலம் முளைத்தவா - தாரகமாம் அத்தன்தாள் நிற்றல் - வித்தகமாம் - அவர் வினையால் - வேட்டுவனும் அப்புழுப்போல் - வேண்டுருவைத்தான் கொடுத்துக் கூட்டானே" எனக்கொண்டு

கூட்டிப் பொருள் காணுதல் வேண்டும். வேட்டுவன் - குளவி என்பது பொருள்.

செய்யாமல் செய்யும் செம்பொருள் :

இங்ஙனம் உலகம் உள்பொருள் என்றும் அதனைத் தோற்று விப்பான் ஒருவன் வேண்டும் என்றும் அவன் மகா சங்காரக் கடவுள் ஆவான் என்றும் கூறப்பெறும் கருத்துக்களை ஒத்துக் கொண்டு அங்ஙனம் அவன் தோற்றுவிக்கும் பொழுது எண்ணிறந்த காலம் படைத்தும் காத்தும் அழித்தும் வருகின்ற இச்செயல்களால் இளைப்பும் களைப்பும் வாட்டமும் ஆகிய விகாரங்களை அடைவானே! அங்ஙனம் வாட்டம் உறுவதனுல், செய்யும் செயல்களில் பிழை வருமே! அப்படி இருக்க அவனை முழுமுதற்கடவுள் என்பது எங்ஙனம் பொருந்தும்? என்பது அடுத்து வருகின்றவினு. இவர்கள் நீரிச்சுர வாதிகள் ஆவர். இவர்களின் கேள்விக்கு அடுத்த வெண் பாவில் ஆசிரியர் விடை தருகின்றுர்.

காலம் என்னும் அருவப் பொருள், இறந்தது, நிகழ்வது எதிர்வது என்னும் முத்திறப்பட்டுப் பயன் தருவதனுல் எந்தவித வேறுபாட்டையும் அடைவதில்லையே! அஃதேபோலவே இறைவனும் படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் மூவகைத் தொழில்களைச் செய்பவனுயிருந்தும் எந்த வித வேறு பாட்டையும் அடையான். மேலும் உலகத்தைப் படையாமல் படைத்து, காவாமல் காத்து, அழிக்காமல் அழித்துச் செய்வன் ஆதலின் எந்தவித விகாரத்தையும் அடையான். அது எவை போலும் எனில், ஒருவன் கற்ற நூல் களினது சொல்லையும் பொருளையும் மீள அவனது நினைவுக்குக் கொண்டுவரும் பொழுது உள்ளம் அந்நினைவினுல் வேறுபட்டும் வேறுபடாதும் நிற்றல் போலவும், ஒருவன் தான் கண்ட கனவை, நனவில் எண்ணும் பொழுது அக்கனவுகளால் எந்தவித மாறு பாட்டையும்பெருதிருத்தல் போலவும் ஆகும் என்று விளக்குகின்றுர் ஆசிரியர். இக்கருத்துக்கள்,

"நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்தின்
தாக்காது நின்றுளத்தின் கண்டுஇறைவன் — ஆக்காதே
கண்ட நனவுணர்வில் கண்ட கனவுணரக்
கண்ட வனின் இற்றின்றும் கட்டு"

என்னும் வெண்பாவினுல் விளக்கப் பெறுகின்றன. "காலத்தின் தாக்காது நின்று - ஆக்காதே கண்டு - நோக்காது நோக்கி - (நொடியாது) நொடித்து - இன்று ஆம் கட்டு - உலத்தின் - கண்ட கனவு - கண்ட நனவுணர்வில் உணரக் கண்டவனின் இற்று" என்று இதனைக் கொண்டு கூட்டிப் பொருள் காணுதல் வேண்டும்.

(தொடரும்)

கழறிற்றறிவார்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 6—11—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

வான்முகில் பெய்தது! மழைவளம் சுரந்தது! அன்று முதல் ஞாயிறு! மழையையும் பொருட்படுத்தாது ஆதீனத் திருமடத்திற்கு அன்பர்கள் வந்திருந்தனர்!

இவர்களுக்கு அருள்மழையும் வேண்டுமாம்! குருவருள் குளிர் விக்கும் என்ற இன்பஏக்கம் இவர்கள் நெஞ்சிலே தழைத்திருந்தது!

ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூசை நிறைந்தபின் குருமணிகள் பண்டாரக்கட்டிற்கு எழுந்தருளிப் பாராயணமும் நிறைந்தது. குருமணிகள் சித்திராசனத்தில் அமர்ந்திருக்க அன்பர்கள் வழிபட்டுத் திருநீறு பெற்றனர். பாராயணம், அடுத்துத் தொல்காப்பியத்தில் சைவ சமயச் சிந்தனை பற்றிப் பேராசிரியரின் ஆய்வுரை, காசியில் நடைபெற உள்ள மூன்றும் அனைத்துலகச் சைவசித்தாந்த மாநாடுபற்றி இயக்குநரின் விளக்கவுரை ஆகியவை நிகழ்ந்தன. குருமணிகள் குருதோத்திரம் செய்துகொண்டு உபதேசம் தொடங்கினார்கள்.

முதலில் மாதச் சிறப்பு நாள்கள்பற்றி அருளி அந்நாள்களின் தத்துவம் பற்றிச் சில குறிப்புக்களை வழங்கினார்கள். தொடர்ந்து திருத்தொண்டர் புராணச் சிந்தனையாகக் கழறிற்று அறிவாராகிய சேரமான் பெருமான் நாயனார் புராணஉபதேசம் செய்தருளினார்கள்.

மலைவளமும் கடல்வளமும் நிலவளமும் பெற்று விளங்குவது சேரநாடு! சேரநாட்டின் தலைநகர் கொடுங்கோளூர்! இங்குச் சிவபெருமான் எழுந்தருளிய திருவஞ்சைக்களம் என்னும் திருக் கோயில் உள்ளது. கொடுங்கோளூர் என்பது அரண்மனை உள்ள ஊர். திருவஞ்சைக் களம்என்பது அரன்கோயில் அமைந்த பகுதி. சேரமன்னர்களுக்குக் கோதை என்னும் பெயரும் உண்டு. இதனால் சேரமன்னர்கள் அரசுபுரிந்த கொடுங்கோளூர் மகோதை என்றும்

வழங்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் மகோதை என்னும் சொல் பற்றிச் சில ஆய்வுக் கருத்துக்களைச் சிந்தனைக்கு விருந்தாக்கினார்கள். ஓதை, ஓசை என்னும் பொருளுடைய சொல். கடலோசை உடைய பகுதி மகோதை எனப்பட்டதோ? ஓதம் என்ற சொல் தரையில் காணும் ஈரத்தன்மையையும் குறிக்கும்சொல். ஓதமுடைய பகுதி மகோதை எனப்பட்டது என்றும் கொள்ளலாம். மேலும் கோதையாறு கடலுடன் கலக்கும் பகுதியாதலால் மகோதை எனப்பட்டது என்றும் கருதலாம். இங்ஙனம் பல சிந்தனைகளை அருளி இது பற்றி மேலும் களஆய்வு முறையில் ஆராயவேண்டும் என நெறிப்படுத்தினார்கள்.

மகோதை நகரில் பெருமாக்கோதையர் என்னும் சேரமானார் அரசர்குடியில் அவதரித்தார்; அரசுமுறையில் உரிய பருவத்தில் சடங்குகள் நிகழ்ந்தன. சைவநெறி ஓங்க, பெருமாக்கோதையர் வளர்ந்தார். இளவரசராய்த் திகழ்ந்த கோதையார் அரசர்க்குரிய தொழில்களை மேற்கொள்ளாமல், முன்னைத் தவப்பயனால் சிவபெருமான் திருவடிபேணும்கருத்தினர் ஆனார். திருவஞ்சைக்களம் அடைந்தார். அதனருகில் ஒருமாளிகை அமைத்துக் கொண்டார். உலகவாழ்வும், அரசவாழ்வும் நிலையில்லாதன என்பதை உணர்ந்தார். திருத்தொண்டுகள் பலபுரிந்தார். விடியற்காலையில் எழுவார்; நீரில் மூழ்குவார். வெண்ணீறு அணிவார். நந்தவனப் பணிபுரிவார். மலர், முகை கொணர்ந்து திருமாலை தொடுப்பார். திருமஞ்சனம் கொணர்வார்; திருவலகும் திருமெழுக்கும் இடுவார். ஒருமைப் பட்ட மனத்தோடு திருப்பாடல்கள் ஓதுவார் - இங்ஙனம் அஞ்சைக் களத்து அப்பனைப் போற்றி இருந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் கொடுங்கோளூரை ஆண்ட செங்கோற் பொறையன் அரசாட்சியைத் தாமாகவே நீத்தான். தவம் புரியக் கானகம் சென்றான். அமைச்சர் முதலாயினர் சிலநாள் ஆராய்ந்து தெளிந்து, சேரநாட்டு முறை மருமக்கள் தாயம் ஆதலால் சேரமான் பெருமாளிடம் வந்தனர்; துதித்து அரசாட்சி ஏற்க வேண்டினர்; "இன்பம் பெருகும் திருத்தொண்டுக்கு இடையூறாக இவர் மொழிந்தார்; எனினும் பெருமானிடம் விண்ணப்பித்துஇறையருள் உண்டேல் ஏற்பேன்" என உரைத்துத் திருக்கோயில் எய்தினார்; வழிபட்டார்; விண்ணப்பித்தார், அருள் கூடிற்று. நன்னாளில் மங்கலச்சடங்குகள் நிகழ அரசுஏற்றார். இம்மை, மறுமை என்னும் இருமை உலகுக்கு ஒருமுடிதரித்த சேரமானார், பரிவாரம் சூழத்திருக்கோயில சென்று வழிபட்டார். நகர் வலம் வந்தார். சேரமானார் யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் இறையருளால் கைவரப் பெற்றுக் கழற்றிறு அறிவார் எனப் பெயர் வழங்கபெற்றார்.

முடிசூடி நகர் வலம் வருங்கால் உவர்மண் பொதி சுமந்த ஒருவண்ணான் தம்முன் வருதல் கண்டார். மழையால் உவர்மண் கரைந்து அவர் உடல் ஊறி வெளுத்திருந்தது; சேரமானார் 'விபூதியை உத்தூளனமாகப் பூசிய அடியார் திருவேடம்' இது என உணர்ந்தார். யானையினின்று கீழிறங்கினார். முன் சென்று கை கூப்பித் தொழுதார்; வண்ணார் மனம் கலங்கினார்; பதைத்தார். "அடியேன் அடி வண்ணான்" என்றார். "அடியேன் அடிச்சேரன்" என்றார் சேரமானார். வண்ணார் பதைப்புற்று இருத்தலைக் கண்ட சேரமானார் "திருநீற்றின் வார வேடம் நினைப்பித்தீர்; வருந்தாது ஏகும்" என மொழிந்தார். அமைச்சர் முதலாயினோர் சேரமானாரின் அன்பின் திறம் கண்டு அஞ்சலி செய்து துதித்தனர்.

இவர் பசி பிணி பகையற்ற சிறந்த அரசு புரிந்தார். சோழ மன்னனும், பாண்டியனும் இவருடன் நட்புக் கொண்டனர். இவர் அரசாட்சிச் சிறப்பைச் சேக்கிழார்,

"உலகு புரக்கும் கொடை வளவர்
உரிமைச் செழியர் உடன் கூட
நிலவு பெருமுக் கோக்களாய்
நீதி மனுநூல் நெறிநடத்தி
அலகில் அரசர் திறைகொணர
அகத்தும் புறத்தும் பகையறுத்து
மலரும் திருநீற்று ஒளிவளர
மறைகள் வளர மண்ணளிப்பார்"

எனக் குறிப்பிடுகின்றார்.

'அரசு புரிவதால் ஆகிய பயனும், நிறைதவமும் தேடும் பொருளும் பெருந்துணையும் தில்லைத் திருச்சிற்றம்பலத்தே ஆடும் கழலே' என உணர்ந்த சேரமான் சிவாகம விதிப்படி சிவபூசை ஆற்றிவந்தார். பூசை முடிவில் நாள்தோறும் காற்சிலம்பொலி கேட்கும்படி தில்லைப்பெருமான் அருள்செய்தார். 'யோகமுறையில் சிவபூஜைசெய்தால் பூசை நிறைவில் சங்கொலி, சிலம்பொலி போன்ற ஒலிகள் அவரவர்க்குத் தனித்தனியே கேட்கும்' - என இதுபற்றிய கருத்தொன்றைப் புலப்படுத்தினார்கள்.

பூசை முடிவில் சிலம்பொலிகேட்டு வந்த சேரமானார்க்கு இறைவன் ஒருநாள் சிலம்பொலி காலம் தாழ்த்துக் கேட்பித்தமை, சேரமானாரைக்காணப் பாணபத்திரருக்குத் திருமுகம் அருளியமை முதலிய செய்திகளைச் சுருக்கமாக அருளினார்கள். சுந்தரர் செந்தமிழ் இறைவனை மகிழ்வித்தது; சிலம்பொலி கேட்பிப்பதில் தாமதம் ஆக்கியது இந்நிகழ்ச்சி. ஐந்துபேரறிவும் கண்களே கொள்ளத் திருக்கூத்தின் இன்பவெள்ளத்தில் திளைத்து, சுந்தரர்

வழிபட்ட முதல் வழிபாட்டின்போது நிகழ்ந்த நிகழ்ச்சியாக இராது; கொங்கு சென்று மீண்டு முதுகுன்று அடைந்து சிதம்பரம் போந்து, பேரூர்ப்பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே கண்டேன் என்று அருளிச்செய்து வழிபட்டபோது இந்நிகழ்ச்சி நடந்திருக்கலாம் - என ஆய்வுக் குறிப்பு அருளினார்கள்.

சேரமானார் அரசுரிமை பெற்று அருளாட்சி புரிந்தமைவரை விளக்கமாகவும் பாணபத்திரர்க்குத் திருமுகம் அருளிச்சேரமான்பால் அனுப்பியமை, சிலம்பொலி கேட்டமை முதலியனவரை சுருக்கமாக மீண்டும் விளக்கம் அருளும் திருநோக்குடனும் அன்றைய அருளுபதேசம் அமைந்து சிறந்தது. சூடான தேநீரும் சுவையான உணவும் தயாராக இருந்தன. அன்பர்கள் தேவைக்கு ஏற்ப அருந்தினர்; உண்டனர். இனிய சிந்தனைகளையும் ஆய்வுச் செய்திகளையும் தாங்கி இல்லம் ஏகினோம்.

வாழ்க குருமணிகள் !

மதிப்புரை

பரவைத் திருமணம்

(நாட்டிய நாடகம்)

[ஆசிரியர் :- கவிஞர் திரு. சீ. ஜோதி, பி. ஏ., வெளியீடு: திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில். அளவு: கிரவுன் 1×16. பக்கங்கள் 24. இலவச வெளியீடு.]

சுந்தரர் வரலாற்றில் தடுத்தாட்கொண்ட புராணப் பகுதி பரவைத் திருமணம் வரை இனிய கவிதைகளாலாகிய நாட்டிய நாடகநூல் இது. பாடல்கள் எதுகை, மோனை இயைபுத் தொடைகள் அமையச் சிறப்பாக அமைக்கப் பெற்றுள்ளன. பதினொன்கு காட்சிகளாகப் புராண வரலாறு பகுக்கப்பட்டுள்ளது. காட்சியின் தொடக்கத்தில் பாத்திரம், களம் முதலிய குறிப்புக்கள் தரப் பெற்றுள்ளன. தக்க இடங்களில் தேவாரம் மற்றும் பெரியபுராணப் பாடல்கள் ஆளப்பட்டிருப்பது சிறப்பு. 'ஞாலம் புகழும் கோலக் கிழவா, ஓலை கொண்டு வழக்காடல் அழகா' (காட்சி 6. பாடல் 23) - என்பது போன்ற பல பாடல்கள் நெஞ்சில் நிலைப்பன. நாட்டியமாக ஆடும் போது பாடல்களாம் பொன்மலர்கள் நாற்றம் பெறும் என்பது உறுதி. சமய உலகம் இத்தகைய நாட்டிய நாடகங்களை அரங்கேற்றினால் எளியோரும் புராணவரலாறுகளை உணர வழிகோலும். ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது.

— கா. ம. கண்ணப்பன்.

செய்திகள்

ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு (விபவ-புரட்டாசி) 6—10—88 அன்று செம்பங்குடி, நாகளேச்சரம், கொண்டல் ஆகிய தலங்களில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச்சிறப்புக்களை விளக்கி உரை நிகழ்த்தினர். அன்பர்கள் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில், ஆங்கிலமாத முதல்ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. இம்மாதம் 89 ஆம் அருளுபதேசம் 6—11—88 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது. தருமை ஆதீனம், அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி, எம். ஏ., பிஎச். டி, 'தொல்காப்பியத்தில் சைவசமயச் சிந்தனை' என்னும் தலைப்பில் உரைநிகழ்த்தினார். அனைத்துலக ஆராய்ச்சி நிறுவன கௌரவ இயக்குநர், சித்தாந்தக்கலாநிதி, திரு. தி. ந. இராமச்சந்திரன், 1988 டிசம்பர் 8, 9, 10 தேதிகளில் நிகழவுள்ள மூன்றும் அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டு நிகழ்ச்சி ஏற்பாடுகள் பற்றி விளக்கினர். அடுத்துத் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவசித்தாந்தநெறி விளக்கும் அருளும் வகையில் கழறிற்றறிவார் புராணத்தில் சேரமான்பெருமாள் நாயனர் அரசுரிமை பெற்றமைவரை விளக்கம் அருளினர்கள். சேரமான், பூசைநிறைவில் சிதம்பரம் நடராசப் பெருமானின் திருவடிச் சிலம்பொலிகேட்டமை பற்றிக் குறிப்பிட்டுச் சுந்தரர்பாடலில் மகிழ்ந்தவாறு பெருமான் சிலம்பொலி கேட்பிக்கக் காலம் தாழ்த்தியமை சுந்தரர் முதல் முறை தரிசனம்செய்தபோது ஆன நிகழ்வு அன்று எனக்குறிப்பிட்டுத்தக்க ஆதாரங்களை அருளிச் செய்தார்கள். பேரூர்ப் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தே கண்டு தொழுதகாலை இது நிகழ்ந்திருக்கலாம் எனக் குறித்தருளினர்கள். சேரமான்பெருமாள் பக்திநலம், சுந்தரருடன் அவர் கொண்ட நட்பு முதலியவற்றை மனங்கொள விளக்கினர்கள்,

தருமை ஆதீன அடியவர்கள், அன்பர்கள், ஆசிரியர்கள் முதலியோர் அருளுபதேசம் கேட்டுப்பயனுற்றனர். அடுத்து 90ஆம் அருளுபதேசம் 4—12—88 அன்று நடைபெறும். அன்பர்கள்கலந்து கொண்டு பயன்பல பெறுவார்களாக.

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர் குருபூஜைவிழா

தருமை ஆதீனத்தைத் தோற்றுவித்தருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தரின் ஞான ஆசிரியராக விளங்கியவர் கமலை ஸ்ரீ ஞானப் பிரகாசர். சிறந்த ஞானசிரியரும் நூலாசிரியருமாகிய விளங்கிய இவர்கள் முத்திப்பேறு எய்திய நாள் ஐப்பசி – தேய்பிறை – சஷ்டி யாகும். இவர்களின் குருபூஜைவிழா, தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்வண்ணம் விபவ - ஐப்பசி 14 ஆம் நாள் 30—10—88 ஞாயிறன்று திருவாரூர் ஸ்ரீ தியாகராஜசுவாமி திருக்கோயிலிலும் திருவாரூர்பூங்கோயில் திருச்சுற்றில் அமைந்துள்ள ஸ்ரீசித்தீச்சரத்திலும் காலையில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெற்றது. கமலைஞானப்பிரகாசர் அருள்நூல்கள் பற்றியும் ஸ்ரீ ஞானப்பிரகாசர் பற்றிய நூல்கள் பற்றியும் கருத்தரங்கம் சிறப்பாகநடைபெற்றது. நண்பகல் தருமை ஆதீன இராஜன்கட்டளைத் திருமடத்தில் மாகேசுவரபூஜை நடை பெற்றது. மாலை திருமுறைக்கலாநிதி திரு. திருஞானசமபந்த தேசிகர், திருமுறைக்கலாநிதி திரு. கலயாணசுந்தர தேசிகர் ஆகியோரின் திருமுறை இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் மாலை வழிபாடாற்றி ஆசியுரை வழங்கினர்கள். மாலை 8 மணியளவில் ஸ்ரீ தியாகராஜருக்கு முசுகுந்தார்ச்சனை நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் பதினேழாம் ஆண்டுக் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளியிருந்து 26½ ஆண்டுகள் அருளாட்சி செய்தருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் பதினேழாம் ஆண்டுக் குருபூஜை விழா 1—11—88 செவ்வாய்க்கிழமையன்று குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளை களிலும் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகளை நிகழ்த்தி அன்பர்கட்கு அருட் பிரசாதம் வழங்கினர்கள். காலை வழிபாட்டின் பின்னும் மாலை வழிபாட்டின் முன்னும் திருக்கயிலாய குருபரம்பரை பற்றிச் சொற் பொழிவுகள் நடைபெற்றன.

காலை வழிபாட்டின் பின்னர்த் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங்கினர்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத் காசிவாசி முத்துக் குமாரசுவாமித் தம்பிரான்சுவாமிகள் தொடக்கவுரை ஆற்றினர்கள்.

ஸ்ரீமத் குமாரசுவாமித் தம்பிரான் உமாபதிசிவாசாரியர் பற்றி உரை நிகழ்த்தினர்கள், மாலை வழிபாட்டின் முன்னர்ப் பேராசிரியர்களும், ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் உரையாற்றினர். நண்பகல் மாகேசுவரபூசை நடைபெற்றது. மாலை தருமைஆதீனம் தேவாரப் பண்ணிசை வகுப்பு மாணவ மாணவியரால் திருமுறை, நாமாவளி பஜனை நிகழ்த்தப்பெற்றது.

இரவு குருமூர்த்த வழிபாட்டின் போது 'சமய இலக்கியம்' என்ற நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் வழிபாட்டிற் கலந்து கொண்ட பக்தர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியருளினர்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அறக்கட்டளைச் சார்பில்

ஸ்ரீகாசியில்: ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி முத்திப்பேறு எய்திய ஸ்ரீகாசி குமாரசுவாமிமடத்தில் ஸ்ரீலஸ்ரீ குருமணியின் திருவுருவப் படத்திற்குச் சிறப்பு வழிபாடும் ஸ்ரீ விசாலாட்சியம்மை ஸ்ரீ விசுவ நாதர் ஸ்ரீ அன்னபூரணி ஸ்ரீ கேதாரநாதர் முதலிய மூர்த்திகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மாகேசுவரபூசையும், சாதுக்களுக்குப் பண்டாராவும் சிறப்பாக நடைபெற்றன.

மயிலாடுதுறையில்: ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருபூசை விழாவை ஒட்டி 1-11-88 செவ்வாயன்று மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றத்தினரால், மயிலாடுதுறை மகாதானத் தெருவிலுள்ள ஸ்ரீ குருஞானசம்பந்தர் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நினைவுவிழாக் கொண்டாடப் பெற்றது.

சென்னையில்: ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகள் இறுதியாக வழிபாடாற்றிய சென்னை மயிலாப்பூர், ஸ்ரீ கபாலீசுவரர் திருக்கோயிலில் வழிபாடும் 1—11—88 அன்று சமயப் பிரசார நிலையத்தில் நினைவுச்சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஞானபீடத்து அமர்ந்த திருநாள்

தருமை ஆதீனம் இருபத்தாறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடத்து அமர்ந்த திருநாள் 4—11—88 வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்றுகாலை ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு ருத்ராபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நடைபெற்றன. திருமுறைகள் பூசிக்கப்பெற்றுப் பாராயணம் செய்யப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்திற்கு, திக்பால விஜயஸ்நாந சாந்தி, ஹோமம் நிகழ்வுற்றது. ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காபரமேசுவரிக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சந்நிதியில் ஸ்ரீ துர்க்கா சூக்த பாராயணமும் நடைபெற்றன. விழாவிற் கலந்துகொண்ட அன்பர்கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் அருட்பிரசாதம் வழங்கினர்கள். அன்பர்கள் தரிசனம் செய்து பயனுற்றனர்.

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 38 ஆவது சதசண்டி வேள்வி விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு 11—10—88 முதல் 20—10—88 முடியப் பத்துநாட்களும் நவராத்திரி விழாவை முன்னிட்டு, உலகநலம் கருதி, சதசண்டி வேள்வி விழா ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் திருவுளப் பாங்கின் வண்ணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்கா தேவி சந்நிதியில் மலர்களாலும், மின் விளக்குகளாலும் அலங் கரிக்கப் பெற்றிருந்த மகாவேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பானமுறையில் சதசண்டிவேள்வி நிகழ்த்தப் பெற்றது. நாள்தோறும் சுவாசினீ, குமாரி, வடுபூஜைகள், சதுர்வேத பாராயணம், தேவீ மகாத்மிய பாராயணம், திருமுறைகள், அபிராமி அந்தாதி பாராயணம், ஸ்ரீ துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீவித்யா சக்கரமாகியமேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

19—10—88 புதன்கிழமை பகல் சப்தசதிஹோமமும், மகா பூர்ணாகுதியும் நிகழ, வேள்வி இனிது நிறைவுற்றது. 20—10—88 வியாழக்கிழமையன்று விஜயதசமிநாளில் காலை துர்க்காதேவிக்குக் கலசாபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவிழாவின்போது இருவேளை களிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக் கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனக் கலைக் கல்லூரி என்னும் இவற்றின் சார்பில் நவராத்திரிவிழா நாட்களில் கலைமகள்விழா இனிதே நிகழ்வுற்றது. நாள்தோறும் பிற்பகல் 3-30 மணியளவில் தருமை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேராசிரியர் களும் பல்துறை அறிஞர்களும் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர்களும், கல்விநிலைய ஆசிரியர்களும் சிறப்புரை நிகழ்த்தினர். தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர்கள் விரிவுரை ஆற்றினர். தருமபுரம் ஸ்ரீகுருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியர் பெரியபுராண நாயன்மார் வரலாற்று உரையாற்றினர். கல்வி நிலைய மாணவ மாணவியரால் கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(விபவஹு கார்த்திகைமீ 1வ முதல் 30வ முடிய)

(16—11—88 முதல் 15—12—88 முடிய)

விபவஹு கார்த்திகைமீ 1ல புதவாரம் திருவோணம் நக்ஷத்திரம் வணிசை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 4 நாழிகை 53 வினடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரியபகவான் கிரகமாலிகையில் உலக சுபிட்சம் பாலித்துக் கொண்டு துலா ராசியிலிருந்து விருச்சிக ராசி சங்கிரமணமாகக் கார்த்திகை மாதப்பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷ்ணுபதி புண்ணியகாலம்; முடவன் முழுக்கு விசேஷம். சங்கிரமணகால கிரக ஸ்திதியினல் உலகில் எங்கும் நற்கன்மங்கள் ஆக்கத்தொழில்கள் வெகுவாகநடந்து, பிரஜைகள் நன்மார்க்கத்தில் செல்வம் ஈட்டி உயர்வர். தேசங்களில் ஆங்காங்கு ஆன்றோர்கள் தெய்வ கைங்கர்யங்கள் அறங்கள் செய்தும் மாந்தர்களுக்குச் சிவ சிந்தனை ஏற்படும் பொருட்டுத் திருச்சபை அமைத்துச் சிவசமயம் பரப்பியும் வருவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் உயர் ஞான பரமாசாரியர்களாக வந்து திருவீற்றுள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் பக்த கோடிகளுக்கு ஞான உபதேசம் செய்து அருள்வார்கள். திருமந்திரகள் விஷயங்கள் உலகத்துக்குத் தம் திருவாய் மலர்ந்து விமர்சித்து உட்பொருள் காட்டி அருளிச் செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சாஸ்திரோக்த நியமத்தில் நித்தியம் ஆறுகால பூசைகள் ஆலய உற்சவங்கள் இனிது நடைபெற்றுவரும். உலகம் சுபிட்சம் அடையும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கௌரவத்திற்கு ஏற்ப வரும். சுப விஷய செலவினங் களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். பூமி இயந்திரங்களில், மதிப்பு

மிக்க பொருள்களில் பணம் முதலீடுசெய்தல், அபிவிருத்தி யாகுதல் ஆகும். டிசம்பர் 5 தேதியில் அரசாங்கத்திலிருந்து லிகிதம்வருதல், ஒப்பந்தங்களில் புதிய ஏற்பாடு செய்தல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம நன்ருக இருந்து வரும். டிசம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் மதிப்பாக வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் நவம்பர் 19 தேதியில் விசேஷ பலனை உண்டுபண்ணும். லிகிதங்கள் அரசுத் தொடர்பு விஷயங்களில் பிரயோஜன சித்தியாகும். அடிக்கடி வெளியூர்ப் பயணம்ஏற்படினும் சிரமம் தோன்ருமல் சமூக நலனில் உவகை ஏற்படும். தாரம் புத்திரர்களுக்குச் சௌகரியமும் சொகுசு வாழ்க்கையும் தரும். டிசம்பர் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம் புதன, வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுன ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வந்து கொண்டிருக்கும். இரத்தின பூஷணம் தரும். ஓர் நவீன வாகனம் இருப்பிட வசதி தரும். அரசாங்கத்தில் நல்ல கௌரவம் தரும். பொதுநலம், தர்ம விஷயங்களில் தாராள மனபான்மையும் எடுத்த கன்மங்கள் சிறப்புற முடிதலும் ஆகும். புத்திரர் அல்லது புத்திரிக்குச் சுபவிசேஷம் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை வைதிக நியமம் தானதர்மத்துடன் நடந்து வரும். நவம்பர் 16, டிசம்பர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். பணவருமானம் மதிப்புடன் வந்துசேரும். ஞானக்கேள்வி, சாஸ்திரங்கள், விஞ்ஞான ஆய்வுகளில் கூர்த்த சிந்தனையை ஏற்படுத்தும். சபையில் தலைமை தாங்குதல் சொற்பொழிவு ஆற்றுதல் ஆகும். வாகன சுகம் திருப்தி யளிக்கும். நவம்பர் 8 தேதி ஆனல் கட்டிடப் பிராப்தியில் புதுமை பொருத்தும். டிசம்பர் 5 தேதியில் புதன் பலனல் காரியங்களை மதிநுகத்தில் பூர்த்தி செய்தல் ஆகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். நவம்பர் 17, 18 டிசம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் அரச செடியில் வருவதாகும். பூஷணங்களின் பிராப்தி யளிக்கும். சுக்கிரன் புதன் பலனால் சாஸ்திரோக்த தெய்வ பிரீதிகள் செய்தல், நல்ல சம்பவங்கள் ஏற்படுதல் ஆகும். குஜன் 8 இல் இருப்பதால் ஓர் விபத்துஏற்படுத்தும், செவ்வாய்க்குப் பிரீதி செய்தல் நலம். காரியங்கள் அனைத்தும் குறிப்பிட்டபடி செய்து முடித்தல் ஆகும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னி ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பணவருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம், கலைத்துறையில் செய்தொழிலில் நல்ல பிரயோஜனம் தரும். இரத்தின பூஷணம் தரும். வீடு மனை ஒப்பந்தங்களில் நல்ல ஏற்பாடு நடக்கும். எல்லாக் காரியங்களும் அரசு அனுகூலத்தினால் மதிப்புடன் நடந்துவரும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும், பண வருமானம் இராஜ கண்யத்தில் வந்துகொண்டிருக்கும், பொது நலன்களில் ஈடுபாடு ஆகும். மக்கள் போற்றுவர். வாகன சுகம் திருப்தியளிக்கும். பூமி இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். எடுத்துக் கொண்ட காரியங்கள் வெற்றிகரமாக நடக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் இல்லற தர்மங்களுடன் நடந்து வரும். நவம்பர் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும், பண வருமானம் வரும். சுப விசேஷங்களில் குல சம்பிரதாயங்களில் இலட்சியப்போக்கில் நல்லவித செலவினை ஏற்கும், வைதிகமாக சாஸ்திரோக்த கிரியை புரிதல் ஆகும். நெறிவற்புறுத்தலில் பணியாளர் சமூகத்தினர் மனக் கசப்புறினும் பின் நல்வழிப்படுவர். டிசம்பர் 5 தேதியில் எழுத்துமூல விஷயங்களில் நல்லன ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் இல்லற தர்மத்துடன் நடந்துவரும். நவம்பர் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் ஒப்பந்த விஷயங்களில் பெரும் பொருள் முடங்கும். அரசுநிபந்தனை பூர்த்தியாகி நலம் பயக்கும். நல்லவர் பெரியவர்கள் பிகுவாக இருந்துவருதல் தோன்றினும் தக்க சமயத்தில் நலம்செய்வர். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் நல்ல வெகுமதிதரும். பதவி உயர்வளிக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். எல்லாக்காரியங்களும் திட்டமிட்டபடி நடந்துவரும். புத்திரர் அல்லது புத்திரிக்குச் சுபம் தரும், தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். நவம்பர் 30, டிசம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானங்கள் கௌரவஸ்திதிக்கு ஏற்ப வரும். அரசகெடியில் அறிக்கைகள் வெளியிடுதல், நற்காரிய அவசர ஏற்பாடுகள் செய்தல் ஆகும். வாகனம் இருப்பிட சௌகரியம் நன்றாக இருந்துவரும். அரசகெடியில் எல்லாக்காரியங்களும் பெருமதிப்பில் நடந்துகொண்டிருக்கும். தாம்பத்திய வாழ்க்கை இல்லற தர்மத்துடன் இலட்சுமி கடாக்ஷம் பொருந்தி நடக்கும். டிசம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். அடிக்கடி வெளியூர் செல்லுதல், அதிக செலவினங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். வித்துவத்துவம், கலைத்துறையில் சிறப்பும் பிரபலஸ்தர் போற்றுதலும் ஆகும். காரியங்கள் தாமதித்து நடப்பினும் திருத்தமானதும் நீடித்ததுமாக மிளிரும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அர்ச்சனை செய்ய விபத்து வரினும் தப்புதல் ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 5, 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

க்ஷத்திரியனுக்கும், வைச்சியனுக்கும் சிவதந்திர முறைப்படியும், சற் சூத்திரர்களுக்கு ஆகமோக்தமாகவும், மற்றவைசவர்களுக்கு மௌன மாகவும், ஆசாரம் சொல்லப்பட்டுள்ளது. பிறகு சந்தியா வந்தனம் போல, சிவார்ச்சனையிலும் கிரஹஸ்தர்களுக்குக் காலநியமம் கூறப் பட்டுள்ளது. சந்நியாசிகளுக்குக் காலநியமம் இல்லாததால் எப்பொழுதும் சிவார்ச்சனை செய்யலாம் என நிச்வாச காரிகையில் கூறப்பட்டுள்ளது. இவ்விஷயம் சோமசம்பு பத்ததியில்

" முமுக்ஷோஸ்ஸர்வதா சஸ்தா சிவபூஜா ந வார்யதேll "

என்று கூறப்படுகிறது.

ஏன் என்றால் நித்யமே யதிகள் பரிசுத்தமாக இருப்பதால் அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

எல்லா வர்ணத்தில், எல்லா ஆச்ரமிகளுக்கும் சிவபூஜை செய்யத்தகுந்தது என்று தெரிகிறது. பிறகு மந்திரபரகாரத்தை சொல்லுகிறது இந்நூல். ப்ராசாத மந்திரம், பஞ்சாக்ஷரமந்திரத்தின் முறையை நன்கு விரிவாகக் கூறுகிறார். பஞ்சாக்ஷரத்தின் ஆறு விதமும் கூறுகிறார். நான்கு வர்ணத்தாரும் எவ்வாறு கூறவேண்டும் என்பதையும் எடுத்துக் கூறுகிறது இந்நூல். ஆகமநூலைப் பயிலும் முறையை நன்கு விரித்துக் கூறுகிறார்.

" வேதாந்தச்ரவணம் தத்ர த்ரிவர்ணானும் விதீயதேl
ஆகமார்த்தஸ்ய சிந்தாந்த: புராணம் சூத்ரவர்ணினும் "ll

என்று கூறப்படுவதிலிருந்து வேதாந்த ச்ரவணம் செய்வதில் முதல் மூன்று வர்ணத்தார்களுக்கும், ஆகமார்த்தத்துடைய சிந்தாந்தத் தை நான்காம் வர்ணத்தவர்களுக்கும் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நான்கு வர்ணத்தவர்களுக்குள் குருவாக இருக்கும் தன்மை எந்த வர்ணத்திற்குத் தகுதி உடையது என்பதை விளக்குகிறார்.

" உத்மோ பிரமணன: ப்ரோக்தோ மத்யம: க்ஷத்ரியஸ்ததாl
அதமோ வைசிய இத்யுக்த: ஸர்வசாஸ்த்திரார்த்த வேதேபி:l
சூத்தரனாம் சததா ஸ்த்ரீணும் குருத்வம் ந கதாசனll "

என்று சூத சம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் நான்காம் வர்ணத்தவருக்கும், ஸ்திரீகளுக்கும் குருத்துவம் இல்லை என்பதாகும்.

மேலும், நான்கு ஆச்ரமிகளுக்கும் குருத்வம் உண்டு எனக் கூறுகிறது சூதசம்ஹிதை என்னும் நூல். இதில் அதிவர்ணாச்சிரமியாக இருப்பின் உயர்ந்தவன் எனத்தெரிகிறது. நான்கு ஆச்சரமிகளுள்ளும், எப்பொழுதும் ப்ரம்மசாரியாக இருக்கிறவர்களுக்குக் குருத்வம்

என்பது மிக மிகச் சாலப்பொருத்தம் என அசிந்தியவிச்வம் என்னும் நூல் கூறுகிறது.

இதிலிருந்து நைட்டிகனான ப்ரம்மசாரியும், சந்நியாசியும் குருவாக இருக்கும் தன்மை பெற்றவர்கள் என அறிய முடிகிறது. மேலும் சுப்ரபேத ஆகமத்தில்,

" ஆசார்ய லக்ஷணோபேத: சைவ சித்தாந்த வித்சுதீ:।
நைஷ்டிதக: சிவயோகஞ்ய: ஸர்வேஷாந்து குருத்தம: ॥

என்ற செய்யுளில் இருந்து ஆசார்ய லக்ஷணத்தோடு கூடியவரும், சைவசித்தாந்தங்களில் நல்லஞானம்உடையவரும் ஆனநைஷ்டிகன் குருவாக இருக்கும் தன்மை உடையவர் எனக் கூறப்பட்டுள்ளது.

இது மாதிரி பற்பல ஆகமங்களில் சான்றுகளால் குருத்துவம் ஆகும் தன்மையை இந்நூல் நன்கு விளக்கிக் கூறுகிறது. அதன் பிறகு ஆசார்ய மதத்திற்கு அர்த்தம் கூறப்படுகிறது.

" ஞானயோக கிரியா சார்யாஸ்ஸய்க் ஆசரதே
யத: தஸ்மாது ஆசார்ய இத்யுக்த: ஸர்வ
சாஸ்த்ரார்த்த வேதிபி:। "

என்று ஆசார்ய மதத்திற்குப் பொருள் கூறப்படுகிறது. ஆச்ரம தர்மத்தினால், தபஸ் முதலிய கிரியைகளில் ப்ராமணன் முதலியவர்களுக்கு நான்கு ஆச்ரமம் வகுக்கப்பட்டுள்ளது. க்ருதயுகம், திரேதாயுகம், த்வாபரயுகம், கலியுகம் என்னும் யுகங்களிலும் நான்கு வர்ணத்தார்க்கும் நான்கு ஆச்ரமங்களில் உள்ள தர்மத்தை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. அதிலும் கலியுக தர்மத்தில்,

" சதுர்வர்ணேஷு ஸ ஸ்ரேஷிட: ஞாநவான்
யோகவான் நர:।
யஸ்மின் ஞான ச யோகஸ்ச ஞானசாதனமேவ ச
சிவலிங்கார்ச்சனம் நித்யம் சிவபக்திஸ்தயைவ ।
த்ரிபுண்ட்ரதாரணம் சைவ பஸ்மோத்தூலன ததா,
ருத்ராக்ஷ தாரணம் சைவ சிவபக்த ப்ரபூஜனம்
தீக்ஷா விதானயோகம் ச துவர்ன்யேஸு ய ரேத்
சத்யாஸ விதினு யஸ்து த்வந்த்வ பூத விவர்ஜித:
ஏதானி லக்ஷுணுநி ந்யஸ்மின் ஸ து ரகூத்தம
சந்யாசினி வா து யோகி வா அதிவாணீஸ்ரமீ ததா
ஏகைகம் வாபி சைகஸ்மின்
ஸர்வம் வாஅபி ததை வ ச।"

இவ்வாறாக எவரிடத்தில் ஞானமும், யோகமும் இருக்கிறதோ அவரே நான்கு வர்ணத்தவருள் உயர்ந்தவர் என்று கலியுகதர்ம

அத்யாயத்தில் கூறப்பட்டுள்ள விஷயத்தை இந்நூல் நன்கு எடுத்துக் காட்டுகிறது. நான்கு வர்ணத்தார்க்கும் நான்கு யுகங்களிலும் நான்கு ஆச்ரமம் உண்டு என்பதைச் சைவாகம நூலாகிற சுப்ரபேதத்தில் நன்கு விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும், நைஷ்டிகனுக்கு ஜாதி, பேதம் இல்லை என்பதை இந்நூல் நமக்குத் தெரியப்படுத்துகிறது. அதாவது

"நைஷ்டிகன்ய விசேஷேன ஜாதிபேதம் ந வித்யதெ"

என்று வாக்யத்திஞல் கூறப்பட்டுள்ளது. மேலும் நான்காவது வர்ணத்தவர்களுக்கும் ஜடாதாரணம் விதிக்கப்பட்டுள்ளது. உபநயநம் செய்யக்கூடிய காலத்தையும், (மூன்றுவர்ணத்தார்களுக்கும்) குறிப்பிடுகிறது. பிட்சை எடுக்கும் முறையை நன்கு விளக்குகிறது.

"பவதி பிக்ஷாம் தேஹி" என்று பிராம்மணரும்,

"பிக்ஷாம் பவதி தேஹி" என்று ராஜாக்களும்,

"பிக்ஷாம் தேஹி பவதி" என்றுவைஸ்யனும் கூறத்தகுந்தது என்று சூதசம்ஹிதை கூறுவதை இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

மேலும் ப்ரம்மசாரியை, இருவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது நைஷ்டிகன் என்றும் பௌதிகன் என்றும் இருவகையாகக் கூறப்பட்டுள்ளது. இதைப்பற்றி இந்நூல் நன்கு விரிவாகக் கூறுகிறது.

மேலும் ஆதி சைவ குலத்தில் தோன்றியவர்களே ப்ரதிஷ்டை முதலிய க்ரியைகளில் சிறந்தவர் என்றும், ப்ராம்மணன் முதலிய நான்கு வர்ணத்தவர்களும் அவரவர்கள் தத்தம் காரியங்களில் தகுதி பெற்றவர்கள் என்றும் கூறியுள்ள காமிகாகம வசனத்தை இந்நூல் நன்கு விரிவாகக் கூறுகிறது.

"ஆதிசைவ குலெஜாத: ஸ்ரெஷ்டஸ்யாது ஸ்தாப நாதிஷு"

என்கிற வாக்கியத்தை நமக்குக் காமிகாகமம் உணர்த்துகிறது. இன்னும், வீரதந்திம் என்னும் நூல்,

"தீக்ஷிதச்சாபி யோ விப்ர: ப்டுத்யாத்தப ந பூஜயெது ।
ஆத்மார்த்தப பூஜந குர்யாத் பரார்த்தம் நைவபூஜயெது"

என்ற வாக்கியத்தால் தீட்சை பெற்றவராக இருந்தாலும் ப்ராம்மணன் பரார்த்த பூஜை செய்யக்கூடாது என்றும் ஆத்மார்த்த பூஜை செய்யலாம் என்றும் கூறுகிறது.

இது போன்ற பற்பல விஷயங்களை - நித்யபூஜா, ப்ரதிஷ்டை, உத்ஸவம், ஆத்மார்த்த ப்ரஸித்தி விஷயங்களைப் பற்றி நன்கு விஸ்தாரமாக வர்ணச்சிரம சந்திரிகை கூறுகிறது.

மேலும் நான்காம் வர்ணத்தவர்க்கு, தீக்ஷையினால் விலகிவிடும் என்பதை இந்நூல் பல சான்றுகளுடன் எடுத்துக் காட்டுகிறது.

" வாகீசீ ஜநநீ யஸ்ய வயோமவ்யாபி பிதாசிவ:
மந்த்ரை: சிவாத்வரேஜாத ச: சூத்திராஸ்யாது கதப்த்வித்॥ "

என்ற வாக்கியத்தினால் தீக்ஷையால் மறுபிறப்பு அடைந்த பிறகு (அதாவது தாய் வாகிஸ்வரி, தந்தை சிவன்.) அந்த நான்காம் வர்ணத்தினருக்கு அத்தன்மை இல்லை எனக் கூறுகிறது. தீட்சையினால் நான்காம் வர்ணத்தவருக்கு ப்ராம்மணத்தன்மை வருகிறது என்பதை இந்நூல் நன்கு கூறுவதைக் காணலாம்.

பிறகு சந்யாச தர்மத்தைப் பற்றி நன்கு விளக்கமாகக் கூறுகிறது இந்நூல். மற்றும் சந்நியாசிகளுக்கு அந்தியேஷ்டி செய்யும் முறையை நன்கு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அக்னிகார்யம் இல்லாமல் செய்யவேண்டும் என்றும், அக்னிகார்யத்தோடு செய்தல் கூடாது என்றும், அவர்களுக்குச் சமாதி எழுப்பவேண்டும் என்று காமிகம் முதலிய ஆகமநூல் பிரமாணமாகக் கூறப்படுகிறது.

"தஹநம் ந குர்வீத யதீநாம் சாவடக்ரியா" என்ற சுப்ரபேத ஆகமநூலில் இருந்து நாம் அறியமுடிகிறது. இதைப்பற்றி நிரம்பவும் விரிவாகக் கூறப்படுகிறது.

பிறகு சமாதி லிங்கத்திற்கு எவ்வாறு ப்ரதிஷ்டை செய்ய வேண்டும், உத்ஸவங்கள் எவ்வாறு செய்யவேண்டும், நித்ய பூஜைகள் எவ்வாறு செய்யவேண்டும், பௌஷ்கர ஆகம வசனப்படி இந்நூல் நன்கு தெளிவுபடக் கூறுவதைக் காணலாம். மேலும் குரு சிவன் இவர்களிடத்தில் எவ்வாறு இருத்தல் வேண்டும் என்பதையும் கூறுகிறது.

" சற்குரும் நாவமந்யேத ரௌரவம் நரகம் வ்ரஜேது।
மந்த்ர ச அக்ஷர பா வேந சிலாருபேண தைவதம்।
குருப் மாநுஷ பாவேநரௌரவம் நரகம் வ்ரஜேது।
மாத்ரு நிந்தா மஹாவ்யாதி: பித்ருநிந்தா। பிசாசதா।
தைவ நிந்தா தரித்திரஸ்யாது குருநிந்தா குலக்ஷயம்॥ "

என்ற வாக்கியத்தில் இருந்து ஒரு பொழுதும், குருநிந்தை செய்யக் கூடாது. அது மட்டும் அல்லாமல், மந்திரத்தை வெறும் எழுத்தாகவும், தெய்வத்தை சிலா (கல்) என்ற பாவத்தோடும் குருவை மனுஷ்யன் என்ற பாவத்தோடும் நினைக்கக் கூடாது என்றும் இந்நூலில் இருந்து நாம் அறியமுடிகிறது. எப்பொழுதும் குருவின் உத்திரவை நிறைவேற்ற வேண்டும். தெய்வத்தினிடத்திலும், குருவின் சந்நிதானத்திலும் பக்தியுடன் இருக்க வேண்டும் என்பதை இந்நூல் நமக்கு நன்கு உணர்த்துகிறது.

வரணுச்சிரம சந்திரிகையை அருளிய

ஸ்ரீல ஸ்ரீ திருவம்பல தேசிகரின்

வரலாற்று சுருக்கம்

திருஞானசம்பந்த தேசிகர்பால் அருளுபதேசம் பெற்றவர் ஸ்ரீலஸ்ரீ திருவம்பலதேசிகர். இவர்கள் அருட்செங்கோல் நடாத்தும் நாளில் மூவலூர் சுப்பராயச் செட்டியாரென்பார் காலஞ்சென்ற தம் தாயாருக்குச் செய்யவேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து முடித்து இக்குருமூர்த்திகள்பால் வந்து வணங்கித் "தாயினை வீடு பெறுவித்தல் புதல்வரது கடனாதலின் அதற்குத் தேவரீர் அருள் பாலித்தல் வேண்டும்" என்று விண்ணப்பித்தார். குருமூர்த்திகள் ஞான நோக்கினால் அவ்வான்மா, செட்டியாரது மனைவியின் கருப்பத்திலிருப்பதையறிந்து, "உமக்கு மகவு வேண்டுமோ? தாய் வீடு பெறுதல் வேண்டுமோ?" என்று வினவ, செட்டியார் "அடியேன் முதலில் வேண்டுவது தாய் வீடு பெறுதலே" என்று தெரிவித்தனர். குருமூர்த்திகளும் "அவ்வாறே செய்வோம்" எனத் திருவுளம்பற்றித், திருமஞ்சனம் முடித்துக்கொண்டு ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்து அவ்வான்மாவைக் கொணர்ந்து தீக்ஷை செய்து வீடுபேறடைவித்தருளினர்.

தஞ்சை யரசன் கடலாட விரும்பிச் சேனைகள் சூழ, காவிரிப்பூம் பட்டினம் நோக்கிச் சென்றான். செல்பவன் தருமபுரம் அணுகினான். ஞானபுரீஸ்வரர் ஆலயத்தில் அர்த்தயாம பூஜை நடந்தது. மணியோசை காதிற்பட்டது. ஊர்தி விட்டிறங்கி மனத்தினால் வணங்கிப் பின்னர் ஊர்தியிலேறிச் செல்லலாயினன். அப்போது உடனிருந்த சிலர் "சூத்திர சமாதியைத் தாங்கள் வணங்கியதால் பாவத்திற்குள்ளானீர்கள். ஆதலால் பிராயச்சித்தம் செய்துகோடல் வேண்டும். அதுவுமன்றி, மற்றையோரும் இக்குற்றத்திற்கு ஆளாகாதவாறு இவ்வாலயத்தை இடித்துவிடுதலே நலம்" எனக் கூறினர். அரசனுக்கு ஞானதேசிகரின் திருவருள் பெறுங் காலம்

சமீபித்தபடியால் ஏவலாளரைக் கூவி ஆலயத்தை இடிக்கத் தொடங்கினார்கள். அதுகண்ட அடியார்குழாங்கள் விரைந்து ஓடிக் குருமூர்த்திகளிடம் தெரிவிக்க, குருமூர்த்திகள்,

" ஈசன் பலகீன னென்றக்கா லாலயத்தின்
மோசம் வந்ததென்று மொழியலாம் — ஈசனே
ஆக்குவது மாக்கி யழிப்பதுவுந் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து "

என்று அடியார்களுக்கு ஆறுதல் கூறியருளினர். எம்பெருமானும் தமது கூத்தொலியினைக் கேட்பித்துத் திருவருள் பாலித்தனர்.

அவ்வொலியினைக்கேட்ட குருமூர்த்திகள் இறைவன்திருவருளை வியந்து சந்நிதானத்தில் நின்று,

" தேசஞ் சிவாலயங்கள் சேர அலையவொரு
மோசம்வந்த தையோ முதல்வனே — தேசத்து
மன்னைவெறுப் பேனோ வருவினையை யூட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேனோ வுரை "

என விண்ணப்பித்துப் பஞ்சாக்கரத்தைச் செபிக்க, இருப்புக் கோல்படு மிடந்தோறும் உதிரம் பெருக, அரசின் ஏவலாளர்கள் மூர்ச்சையுற்று வீழ்ந்தனர். நகரெல்லையைக் கடந்து சென்ற அரசனுக்கோ கண்ணொளி மழுங்கிற்று. ஆலயத்தை இடித்தாரும் ஊமையராய்த் திகைத்து நின்றார்கள். அரசன் தனது குற்றத்தை யுணர்ந்து மீண்டும் தருமபுரமடைந்து தன் ஏவலாளர்களின் நிலைமையைத் தெரிந்துகொண்டு மடாலயத்தினுட்சென்று குருமூர்த்திகளின் திருவடிகளில் விழுந்து, 'பிழை பொறுத்தருள வேண்டும்' எனப் பிரார்த்தித்தான்.

குருமூர்த்திகளும் இறைவன் அருள்புரிவான் எனத் திருவுளம் பற்றி அரசனுடன் ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். ஆலயத்தை யடைந்த அரசன் "இறைவனைத் தரிசித்தற்குக் கண்ணொளி இல்லையே; எவ்வாறு காண்பேன்" என்று வருந்த குருஞான சம்பந்தர் அருளால் ஒருகண் விளக்கமுற்றது. ஏவலாளர்கள் கீழே வீழ்ந்து கிடப்பதையும், கோல்பட்ட இடங்களில் உதிரம் பெருகுவதையும் கண்டு குருமூர்த்திகளைப் பிரார்த்திக்க, குருமூர்த்திகள் திருநீற்றினைத் தெறித்தார்கள். உடனே உதிரம் பெருகுதலும் நின்றது. ஏவலாளர்களும் எழுந்து ஞானமூர்த்திகளை வணங்கி நின்றார்கள்.

பின்னர், அரசன் காவிரிப்பூம்பட்டினம் சென்று கடலாடித் தருமபுரத்தின் தென்கீழ்த் திசையில் கூடாரம் அமைத்துத் தன் பரிவாரங்களுடன் தங்கி, சுவாமி தரிசனம் செய்துவருங்கால் ஒரு நாள் குருமூர்த்திகளிடம் " 'சூத்திரர்களுக்குச் சந்நியாசம் பெற அதிகாரமில்லை' என்று சிலர் கூறி அடியேனை மயக்கிவிட்டார்கள்; அதன் உண்மையைத் தெரிவித்தருள வேண்டும்" என்று விண்ணப்பித்துக்கொண்டனன். குருமூர்த்திகள் பலபிரமாணங்களால் அவன் ஐயத்தை நீக்கி, வருணாச்சிரம சந்திரிகை என்றதோர் நூலும் இயற்றியருளினார்கள். சந்நியாசத்தில் அதிகாரமில்லை என்று கூறியவர்களும் வெட்கித் தலைகுனிந்தனர். அரசன் ஒரு மண்டலம் சுவாமி தரிசனம் செய்து முடித்தவுடன் குருவருளால் அவனது மற்றொரு கண்ணும் விளக்கமுற்றது. ஊமையாயினரும் ஊமை நீங்கப் பெற்றார்கள். அதனால் அளவிலா உவகை கொண்ட அரசன் தான் முதலில் தரிசித்தது அர்த்தயாம பூசையாதலால் அதுசிறப்புற நடைபெறுதற்கு வேண்டிய சிலநிலங்களை அளித்து விடைபெற்றுச் சென்றனன்.

அவ்வரசனின் மந்திரியாகிய கோவிந்த தீக்ஷிதர் என்பார் இவ் வற்புதங்களைக் கேள்வியுற்றுத் தருமபுரம் வந்து குருமூர்த்திகளைக் கண்டு வணங்கி, திருச்சத்திமுத்தத் திருக்கோயில் திருப்பணி செய்யுங்காலத்து அங்கு ஓர் மடம் அமைத்துக் குருமூர்த்திகளை எழுந்தருளியிருக்கச் செய்துப், திருவையாற்றில் புஷ்ய மண்டபமாதி திருப்பணி செய்யுங்காலத்து திருவையாற்றில் எழுந்தருளித், தொண்டுபல செய்து சிலநாள் உடனிருந்துபின்னர் விடைபெற்றுச் சென்றார். அப்போது திருக்கூட்டத்தடியார்களுள் ஒருவரைக் கொண்டு திருவையாற்றுப் புராணம் இயற்றுவிக்கப்பட்டது.

இக்குருமூர்த்திகள் சிலநாள் சிவஞானபாநுவாய் விளங்கியிருந்து தம் அடியார்களுள் ஒருவருக்கு ஞானபிஷேகம் செய்து அழகியதிருச்சிற்றம்பலதேசிகர் எனத் திருநாமஞ்சூட்டி, பட்டத்தில் இருக்கச்செய்து முத்திநிலை எய்தினர்.

கார்த்திகை மாதச் சிறப்பு நாட்கள்

16—11—88 புதன், விஷ்ணுபதி புண்ணியகாலம். முடவன் முழுக்கு. திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். விருச்சிகரவி 4-53.

19—11—88 சனி, சர்வ உத்தான ஏகாதசி, வேலூர், ஸ்ரீ வள்ளிதேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவீதியுலா. தருமை ஆதீனம் 8 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அழகிய சிற்றம்பல தேசிக சுவாமிகள் குருபூஜை.

20—11—88 ஞாயிறு, கருங்குயில்நாதன்பேட்டைஸ்ரீபஞ்சமூர்த்திகளும் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். தருமை ஆதீனம் 16ஆவதுகுருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசச்சிதானந்ததேசிக சுவாமிகள் குருபூஜை.

21—11—88 திங்கள், சோமப்ரதோஷம். திருப்பனந்தாள், திருக்கடவூர்

22—11—88 செவ்வாய், பரணி தீபம். [1008 சங்காபிஷேகம்.

23—11—88 புதன், திருக்கார்த்திகை. வேலூர் கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். பௌர்ணமி விரத பூஜை. அக்னிமாலை சாத்துதல், பொறி நைவேத்தியம், திருச்சுடர் அபிஷேகம். திருவண்ணாமலை சர்வாலய, வைகானச பாஞ்சராத்ரதீபம். தருமை ஆதீனம் 18 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் குருபூஜை. ஸ்ரீ கணம்புல்ல நாயனார் குருபூஜை.

27—11—88 ஞாயிறு, சங்கடஹர சதுர்த்தி.

29—11—88 செவ்வாய், ஆயில்ய விழா.

1—12—88 வியாழன், மகாதேவாஷ்டமி. காலபைரவாஷ்டமி. திருவையாற்றில் ஸ்ரீ ஆட்கொண்டாருக்கு அபிஷேகம். தீர்த்தம். வடைமாலை.

2—12—88 வெள்ளி, ஸ்ரீ மெய்ப்பொருள் நாயனார் குருபூஜை.

4—12—88 ஞாயிறு, ஸ்ரீ ஆனாய நாயனார் குருபூஜை.

6—12—88 செவ்வாய், பிரதோஷம்.

7—12—88 புதன், மாத சிவராத்திரி.

8—12—88 வியாழன், சர்வ அமாவாசை.

9—12—88 வெள்ளி, குத்தாலத்தில் கடைவெள்ளி ஸ்தலவிருக்ஷபூஜை.

10—12—88 சனி, ஸ்ரீ மூர்க்க நாயனார் குருபூஜை.

11—12—88 ஞாயிறு, ஸ்ரீ சிறப்புலி நாயனார் குருபூஜை.

12—12—88 திங்கள், கடைசி சோமவாரம். சதுர்த்தி விரதம்.

15—12—88 வியாழன், ஷடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்பிறப்பு தீர்த்தம். சாபரவி 35-17. மயிலாடுதுறை வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்திக்கு விசேஷ அபிஷேக ஆராதனை. வேலூர், திருவையாறு, திருப்பனந்தாள், கடவூர், சீகாழி, சிதம்பரம், உத்தரகோசமங்கை முதலிய தலங்களில் திருவெம்பாவை உற்சவம் ஆரம்பம்.

வெளிநாடு Regd. No. TN / M. M.

மதிப்புரை

சிவஞானபோதம்

விளக்கப் பதவுரை

[வெளியிட்டோர் ; திருவள்ளுவர் கழகம், தென்காசி, விலை ரூ. 1 - 00, விளக்கப் பதவுரை ஆசிரியர் - செந்நெறிச்செல்வர், திரு. கு. வைத்தியநாதன். பக்கங்கள் - 32.]

சைவ சித்தாந்த சாத்திரங்களின் முடிமணியாகத் திகழ்வது சிவஞானபோதம். பன்னெடுங்காலமாய்த் தென்னாட்டில் விளங்கி வந்த சைவசமயக் கோட்பாடுகளின் தத்துவ நெறிகளை, சந்தான பரம்பரையில் பரஞ்சோதி மாமுனிகள்பால் பெற்ற உபதேசத் தெளிவால் மெய்கண்டார் வகைப்படுத்தியும் தொகைப்படுத்தியும் சிவஞானபோதம் என்ற பெயரால் இந்நூலைச்செய்துள்ளார். சிறிய கண்ணாடி பெரிய மலையைத் தன்னகத்தே அடக்கிக் காட்டுதல் போல் பரந்து விரிந்த சாத்திரக் கருத்துக்களை இந்நூல் சுருக்கிக் கூறுகிறது. பன்னிரண்டு சூத்திர யாப்பால் அமைந்த இந்நூற் பொருளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிந்துணரும் வகையில் விளக்கப்பதவுரை எழுதியுள்ளார் திரு. கு. வைத்தியநாதன். தென்காசித் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெறும் சிவஞானபோத வகுப்பிற்குப் பயன்படும் வண்ணம் ஆசிரியர் எழுதியுள்ள இவ்வுரை நூல் சிவஞானபோதக் கருத்துக்களை அறிந்துணர விரும்புவார் பலர்க்கும் பயன்படும் வகையில் அமைந்துள்ளது.

ஆசிரியரின் தெளிவான உரை படிப்பவர்க்குச் சிவஞான போதத்தின் செம்பொருளை இனிது விளக்கும்.

திருவள்ளுவர் கழகத்தினரின் சைவமெய்ப்பணி பாராட்டற் குரியது.

(வி. வி. சா. குருசாமி தேசிகர்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-11-88.